மகிழ்ச்சி

BLIC LIBRAR

அ 4 ணா சீர்திருத்த மாத இதழ்

விஜய

நேயர்களின் புகைப்படப் போட்டி.

பரிசு பெற்ற படம்.



தமிழர், தெலுங்கர், கன்னடவர், மலையாளி, துளுவர், ஆகிய ஐம்பெரும் பாஷையினரும் ஒரே இனம் என உணர்த்தும் ஒன்றில் ஐங்கிளை கொண்ட பனை. இது ஸ்ரீவைகுண்டத்திற்குக் கிழக்கே 12வது மைலில் உள்ள பெருங்குளத்தில் உள்ளது.

போட்டோ:

M. சிவகுருநாதன், பெருங்குளம்



பிரசுரத் தேர்வு பெற்ற படங்கள்.

பழனி சண்முக நதியின் ஒரு தோற்றம்.

கீழே, பம்பாய் 'சோப்பாட்டி' மலபார் ஹில்ஸிலிருந்து தோற்றம்.

போட்டோ: **S.** நாராயணன், விருதை.

அந்தி வேளையிலே!

போட்டோ:

V. O. V. P. நாகரத்தினம், விருதை.

குறிப்பு: புகைப்படப் போட்டிக்குப் படங்கள் அனுப்பினாலே போதும். நெக்கட்டிவ் அனுப்ப வேண்டியதில்லை. படத்தின் விபரமும், படம் எடுத்தவர் விலாசமும் படத்தின் பின்னால் அவசியம் எழுதியனுப்பவேண்டும். முதலிடம் பெறும் படத்திற்கு ரூபாய் ஒன்று பரிசு அளிக்கப்படும்.

மகிழ்ச்சி சதானந்தம்
எழுதும்
புதிய தொடர்கதை

?

மகிழ்ச்சியில்
விரைவில் வருகிறது

அஞ்ஞானம் பரவியிருந்த
அந்தக் குக்கிராம மக்கள்
விஞ்ஞானத்தின் தலைவாயிலை
அதிவிரைவில்
எட்டிப், பிடித்தனர் எப்படி?

எழுத்தாளர்களுக்கு!

கதை, கவிதைகள் ஏராளமாக க்கைவசம் இருப்பதால், மேற்கொண்டு யாரும் அனுப்பவேண்டாம்.

பெண்கள் பகுதிக்கு, பெண்களிடமிருந்தே எதிர்பார்க்கிறோம். பெண்களின் புனைப்பெயரில் ஆடவர்கள் தயவுசெய்து எழுதவேண்டாம்.

கதை, கட்டுரை, கவிதை சம்பந்தமாக தபாலோ, ரிப்ளை கார்டோ எழுத வேண்டாம். கண்டிப்பாக பதில் எழுத இயலாது.

எழுத்தோவியங்களுடன் ஸ்டாம்பு அனுப்பவேண்டாம். திரும்பஅனுப்பப்படமாட்டாது.

மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்

ஆசிரியர்: நா. சதானந்தம்
விருதுநகர்.

தி. ஆ. 1984—வைகாசி 1.
ஆண்டு 4] 14–5–53 [மாதம் 12

பொருளடக்கம்

தலையங்கம் 2
உங்களுக்குத் தெரியுமா? 4
திருக்குறள் கூறும் கதை
மாணவர்க்கு 7
அறிவுப் பூங்கா 8
தொழில்துறையில் மனிதர்உறவு
ஜி. டி. என். 9
தெருவிலே திரைப்படம் 16
படிப்பும் பாவையும் 19
எழுத்தாளர் திருந்துவாரா? 27
ரசிக நாயனார் 29
ஜாதி ஒழிப்பிற்கு யோசனை
கார்டு போட்டி 7 33
சிந்தனை சுழற்று (கவிதை) 35
சந்தேகம் ஒழிக! 36
தெறித்த முத்துக்கள் 38
இதுநிஜமா? 40
முள்—தொடர் கதை 41
இரவு 46
சினிமா
கட்டுரைப் போட்டி 7 49
மனிதன்—படவிமர்சனம் 51
ஞா. சோ. போட்டி 14 55

கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

அறிவுச் சுரங்கம்

ஆர். கே. எஸ். மறைவு!

அறிவுச் சுரங்கம், அரசியல் மேதை, பொருளாதாரப்புரவலர், டத்தாட்சி பெற்ற சுதந்திர இந்தியாவின் முதலாவதுநிதியமைச்சர், தமிழிசைச் சங்கப் பிதா, தமிழ்க் காதலன், டாக்டர் ஆர். கே. சண்முகம் அவர்கள் தனது 61வதுவயதில், இரத்தக்கொதிப்பு, இருதயக் கோளாறு காரணமாக, 5—5—53 செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு இயற்கை எய்தினர் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். திகைத்தோம்.

ஐந்தாண்டுப் பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டங்களும், ஆந்திரப் பிரிவினையும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்நெருக்கடியான நிலையில், தமிழகம், தலைசிறந்த அறிஞரை, நிபுணரை, நேருவின் கையைப் பலப்படுத்திய நிறைமதியினரை இழந்துவிட்டது. பாண்டியனார் மறைவு கேட்டு பதைபதைத்த தமிழரின் துயர் நீங்கும்முன் மற்றோர் பேரிடி ஆர். கே. எஸ். மறைவு.

திரு. ஆர். கே. சண்முகம் அவர்கள் 1892 அக்டோபர் 17ம் நாள் பிறந்தவர். பீ.ஏ., பீ.எல். படித்த இவர் 1920ல் சென்னை மேல்சபைமெம்பரானர், 1922ல் அபிவிருத்தி மந்திரியின் காரிய தரிசியானர். அடுத்த ஆண்டு சட்டசபை மெம்பரானர். 1924ல் இந்திய தேசீய கழக தூதுகோஷ்டி மெம்பராக பிரிட்டனுக்குச் சென்றார். 1926ல் ஆஸ்திரேலியாவிற்கு இந்தியப் பிரதிநிதியாக சாம்ராஜ்ய பார்லிமெண்டரி சங்க மகாநாட்டிற்குச் சென்றார். 1930ல் போட்டியின்றி மத்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1931ல் மத்திய சட்டசபை உபதலைவரானர். 1932ல் ஜெனிவா நகரில் நடந்த சர்வதேச தொழில் மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார். பின் ஒட்டாவா நகரில் நடந்த சாம்ராஜ்ய பொருளாதார மகாநாட்டில் கலந்துகொண்டார். 1933ல் மீண்டும் மத்திய சட்டசபை மெம்பரானர். 1938ல் சர்வதேச சங்கத்திற்குச் சென்றார். 1935—41 வரை கொச்சி திவானாக இருந்தார்.

வாழ்க்கையின் பெரும் பகுதியை அரசியல் விவகாரங்களிலேயே கழித்த இவரது 60வது ஆண்டுப் பூர்த்திவிழா சென்ற ஆண்டுதான் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

திரு. ஆர்.கே.எஸ் அவர்கள் தமிழுக்கும், தமிழ் இசைக்கும் செய்த தொண்டு அளவுகடந்தது. கீழே யுள்ள இவரது தமிழ் கையெழுத்து "தலைவர் காமராஜ்" என்ற நமது புத்தகத்திற்காக 7—2—49ல் அவர் முன்னுரை வழங்கியதிலிருந்து எடுக்கப்பட்டது. அதற்கு முன் கண்டு பேசியிராத, அறிமுகம் செய்யப்படாத நிலையில், நேரில் சென்று புத்தகத்திற்கு முன்னுரை வேண்டிக் கேட்டபொழுது, புன்முறுவல் பூத்து, இன்சொல் நவின்று, எளிய இனிய, தித்திக்கும் தேன் தமிழில் முன்



னுரை எழுதித் தந்தார். எனது விருப்பப்படி அவர் தந்தபடமே மேலே உள்ளது.

இதற்கு முன் அவர் விருதுநகர் முனிஸிபாலிட்டியின் வெள்ளிவிழாவின் இறுதி நாளன்று (15—3—1945) தலைமைதாங்கி பல விளையாட்டுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள்வழங்கிய நிலையில், தனிப்பட்டவர்கள் விளையாட்டுகளில் முதன்மை ஸ்தானம் பெற்ற எனக்கு 'சாம்பியன் கோப்பை'யை வழங்கிய பொழுது நான் பார்த்ததான். அவர் என்னை ஞாபகம்வைத்துக் கொள்ளும்படியான சந்தர்ப்பமே கிடையாது. இருந்தும், அவர் என்னிடம் அவர் இல்லத்தில் நடந்துகொண்ட விதம், முறை, பண்பு, இன்னும் என்மனக்கண் முன் நடமிடுகின்றன. கண்கள் நீரைப் பெருக்குகின்றன. அவர் குடும்பத்தினர்க்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவிற்கு 5வது இடம்

ஜூன் 2ல் பிரிட்டிஷ் ராணி எலிசபெத் முடிசூட்டிக்கொண்ட பின் லண்டன் நகரில் தமது கணவருடன் தங்கக் குதிரை வண்டியில் ஊர்வலம் வருவார். இந்தஊர்வலத்தில் கலந்துகொள்ளும் காமன்வெல்த் முதலமைச்சர்களின் வரிசை.

(1) வட அயர்லாந்து (2) தெற்கு ரொடீஷியா அமைச்சர் தம்பதிகள் (3) இலங்கை டட்லி சேனநாயகா (4) பாகிஸ்தான் முகமதலி தம்பதிகள் (5) இந்தியா நேருவும் அவர் மகள் இந்திராவும் (6) தென்னுப்பிரிக்க மலான் தம்பதிகள் (7) நியூசிலந்து அமைச்சர் தம்பதிகள் (8) ஆஸ்திரேலியா அமைச்சர் தம்பதிகள் (9) கானடா (10) சர்ச்சில் தம்பதிகள்.

நேருவைத் தவிர எல்லோருக்கும் அவரவர் நாடுகளிலிருந்து வந்துள்ள மெய்க்காப்புப்படையினர்பாதுகாப்புஊர்வலத்திலுண்டு

ராணிக்கு ஏலக்காய் மாலை

போடி தென்னிந்திய ஏல வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக, வேலைப்பாடுகளுடன் தயாரிக்கப்பட்ட அழகிய ஏலக்காய் மாலை ஒன்று, ராணிஎலிசபெத்திற்கு முடிசூட்டுவிழாப் பரிசாக விமானம் மூலம் அனுப்பியுள்ளார்கள். 1935ல் நேருவிற்கும், 1946ல் காமராஜுக்கும்போடிவிஜயத்தின்போது இதுபோல் மாலைகள் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டதாம். இது 3வது பரிசு.

புதிய ரிக்கார்டு!

பிரிட்டிஷ் இரட்டை ஜெட் கான்பரா குண்டு வீசிய விமானம் ஒன்று 63668 அடி (12 மைல் 308 அடி) உயரம் பறந்து புதிய ரிக்கார்டு ஏற்படுத்தியுள்ளது. முந்தியதைவிட 4222 அடி உயரம் அதிகம்.

உலக ரிக்கார்டு!

பம்பாய் குர்லா வாசியான ஹைதர்ஆலி (28 வயது) இடைவிடாது ஓய்வின்றி 106 மணி நேரம் சைக்கிள் சவாரி செய்து உலகரிக்கார்டு ஸ்தாபித்துள்ளார்.

சென்னையில்தான் அதிகம்

இந்தியாவிலுள்ள மொத்த அட்வகேட்டுகள் 26465 பேர். இவர்களில் அதிகமான பேர்

M.K.தியாகராஜ் போட்டோ டேிகள்
மேலான குணமுடையவை.

சென்னையில்தான். சென்னை 7268; பம்பாய் 4709; வங்காளம் 2559; உத்தரப்பிரதேசம் 2558; திருவாங்கூர்—கொச்சி 2075; ஒரிஸா 191. மற்றவர்கள் C பிரிவுகளில் உள்ளனர்.

இது 1952 மார்ச் 31உயன்று அகில இந்திய பார் கமிட்டி எடுத்த கணக்கு.

புதுமுறைக் கல்வி!

இதன்படி கிராமாந்திரப் பள்ளி மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் இருக்க வேண்டிய நேரம் தினம் மூன்றுமணிதான். அவசியமானால் வாரத்தில் 6 நாள் பள்ளிக்கூடம் இருக்கும். மீதமுள்ள அரை நாளில் மாணவர்கள் தங்கள் பெற்றோர்களின் தொழிலைக் கற்றுக்கொள்வதற்காக அனுப்பப்படுவார்கள். பெற்றோர்கள் வீட்டில் தொழில் செய்யாதவர்களாய் இருந்தால் அந்த மாணவர்கள் ஒரு குடியானவரிடமோ அல்லது கிராமத்திலுள்ள மற்ற தொழில் செய்பவர்களிடமோ அனுப்பப்படுவார்கள்.

கார்டு போட்டி 8

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் நிலை

கார்டின் ஒரே பக்கத்திற்குள் 31—5—53க்குள் எழுதி அனுப்பவும். தேர்ந்தெடுக்கப்படும் இரண்டுக்கு ஒரு ரூபாய் வீதம் பரிசளிக்கப்படும். மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

விருதுநகர்
நியூ முத்துவில்
T. K. சண்முகம், T.K. பகவதி, K. ராமசாமி, S. A. நடராஜன், மாதுரிதேவி, பண்டரிபாய் கிருஷ்ணகுமாரி நடித்த
"மனிதன்"
இப்பொழுது நடைபெறுகிறது



— மாணவர் பகுதி —

திருக்குறள் விளக்கக் கதை-1

[கோ. விஸ்வநாதன்—குடந்தை]

குணசேகரன் ஏழ்மையைத் தோழமையாகக் கொண்ட ஓர் எளிய குடும்பத்தில் பெற்றோருக்கு ஒரே புதல்வனாகத் தோன்றியவன். அவன் தந்தை ஒரு மளிகைக் கடையில் கணக்கு எழுதும் வேலையில் அமர்ந்து சொற்ப வருமானத்தில் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தார். ஒரு வகையில் அவர் முக்காலமுணர்ந்த ஞானியாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிடில் அவர் தன் மகனுக்குக் குணசேகரன் என்று பெயர் வைத்திருக்கமாட்டார். அவருடைய ஒரே லட்சியம், தன் மகனை தான் பிச்சையெடுத்தாவது எாலெழுத்துப் படிக்க வைத்துவிட வேண்டும் என்பதுதான்.

வாழ்க்கைக் கூறுபாட்டிலே, ஒன்றை அதிகமாக அளித்துப் பிறிதொன்றைக் குறைத்துவிடுவது இயற்கையின் இயல்பு போலும்! செல்வந்தனாக இருப்பான்; கேள்விச்செல்வம் வறண்டிருக்கும். வறுமையில் உழல்பவன் வற்றாத கல்விக் கடலாக இருப்பான். இந்தநியதிப்படியே குணசேகரனின் வாழ்க்கையும் அமைந்திருந்தது. அத்தியாவசிய இரண்டொரு புத்தகங்களை வாங்கிக்கொண்டு, தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று உபகாரச் சம்பளத்தில் படித்து எஸ்.எஸ்.எல்.சி. 'பாஸ்'பண்ணிவிட்டான் குணசேகரன்.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் வேலைக்காகத் தந்தையும், தனயனும் அலையாதஇடமில்லை. இறுதியில் வெளியூரில் ஒரு சுங்கவரி அலுவலகத்தில் வேலை கிடைத்தது. அரசினர்க்குத் தெரியாமல் சரக்குகளைக் கடத்திச் சென்று கொள்ளை லாபம் அடிக்கும் கருப்பு 'மார்க்கெட்' வியாபாரிகளைக் கண்டு பிடித்து அரசினரிடம் ஒப்படைத்தலே அவன் மேற்கொண்டிருந்த பணி.

ஒருநாள் இரவு மணி 12-30 இருக்கும். குணசேகன் இராக்காவல் புரிந்துகொண்டிருந்தான். முன்னிரவுக் காலம் ஆனதால் தேய்பிறை அப்பொழுதுதான் உதயமாயிற்று. அந்த மங்கிய ஒளியிலே தூரத்தில் சரக்கு மூட்டைகளைச் சுமந்தபடி ஆட்கள்செல்வது தெளிவாகத் தெரிந்தது. உடனே குணசேகரன் தனது சட்டைப் பையிலிருந்த கைத் துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு விரைந்து சென்றான். இவனைக்கண்டதும்

அந்த ஆட்கள் ஓட முயன்றனர். ஆனால் குணசேகரன் துப்பாக்கியைக் காட்டி அலுவலகத்திற்குச் செல்லுமாறு உத்தரவிட்டான். அச்சமயம் அந்த ஆட்களுக்கு முன் சென்றுகொண்டிருந்தஒரு மனிதர் அவனிடம் வந்து, "என்ன தம்பி! இதெல்லாம் மாமூல்தானே! இப்படி நிறுத்திட்டியே நீ இந்தஇலாகாவிற்குப் புதிதுபோலிருக்கு. இல்லாவிட்டால் என்சரக்கைப் பிடிக்க மாட்டாய்" என்று கூறிவிட்டு அவன் கையில் 50ரூபாய் நோட்டுக் கற்றையைத் திணித்தார். குணசேகரன் வெகுண்டான். "உங்கள் பணத்திற்குப் பணியும் பரமமுட்டாள் நானல்ல. நீங்கள் இப்பொழுது கைதாகியிருக்கிறீர்கள். நடங்கள் ஆபீஸுக்கு... உம்" என்று கட்டளையிட்டான். அந்த மனிதரின் கையூட்டு (லஞ்சம்) படிப்படியாக உயர்ந்து ரூ. 500வரை சென்றது. அப்படியும் குணசேகரன் மசியவில்லை. அந்தப் பெரிய மனிதரும் அவரது ஆட்களும் கைது செய்யப்பட்டனர்.

விசாரணை நடந்தது. எது நடந்து என்ன பயன்? பணம், பாதாளம் வரை பாயும் சக்தியை நிரூபித்துவிட்டது. "நாடறிந்த ஒருசெல்வச்சீமான்மீது அபாண்டமாகப்பழிசுமத்தி அன்னாருக்கு மானக் குறைவை உண்டாக்கியது சட்டவிரோதம். ஆகையால் அதற்குக் காரணமாயிருந்த குணசேகரனை, அவனது அனுபவக் குறைவுக்காக வேலையிலிருந்து விலக்கிவிடுவதுதான் தகுந்த தண்டனை" என்று தீர்ப்பளிக்கப்பட்டது. யாவரும்குணசேகரனை எள்ளி நகையாடினர். ஆனால் அவன் மட்டும் நன்மை வந்தால் என்ன? தீமை நேர்ந்தால் என்ன? கடமையைஆற்றினேம் என்ற உள்ள நிறைவோடு வீட்டையடைந்தான்.

சின்னாட்கழித்து அந்தப்பெரிய மனிதர் குணசேகரனைத் தேடி அவன் வீட்டிற்கு வந்தார். அவர் அவன் தந்தையிடம் "உங்கள் மகன் ஒருவன்தான் என் செல்வத்திற்குத் தலைவணங்காமல் நேர்மையாக நடந்துகொண்டவன். ஆகையால் இந்த வாய்மையாளனை வற்றாத என் செல்வத்தின் பாதுகாவலனாகவும், என் காரியதரிசியாகவும் நியமித்து மாதம் ரூ. 150 அளிக்கத் தீர்மானித்துவிட்டேன்" என்று கூறிமுடித்தார்.

குணசேகரனும், அவன் தந்தையும் மகிழ்ச்சியினாலும், ஆச்சரியத்தினாலும் என்ன சொல்வதென்று தோன்றாமல் கல்லாய்ச் சமைந்துவிட்டனர்.

"உள்ளத்தால் பொய்யா(து) ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்" —குறள்.

மேடைப் பாடல்கள்

ஆசிரியர்:
கவிஞர் சப்பு ஆறுமுகம்
புத்தன்பதிப்பகம், சென்னை-5
பக்கங்கள் 16 :: விலை 2 அணா

கருத்தும் இனிமையும் நிறைந்துள்ள 10 பாடல்கள் நவீன சினிமா மெட்டுகளிலும் விருத்தமாகவும் இயற்றப்பட்டுள்ளது.

* * * *

கடவுளைக் கொன்றுவிட்டார்கள்!

ஆசிரியர்: மீ. சுந்தரம்
பக்கங்கள் 20—விலை 3 அணா

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்ற கருத்தையொட்டி, ஆசிரியர் வேலாயுதம் படுகொலை செய்யப்பட்டதை சிந்தையைக் கிளரும்வண்ணம் ஒரு கதையும், மதுரையில் புயல் புரளியால் தான் பல ஆண்டுகளாக கட்டிக் காத்துவந்த கற்பை 'நாளை நம் நாளோ, நமன் நாளோ?' என்ற திண்ணைப் பேச்சுக்கு இடங்கொடுத்து இழந்த இளம் பெண்ணின் சோகக் கதையை 'புயல் வருகிறது' என்ற தலைப்பில் 2வது கதையும் உள்ளது.

* * * *

தி.மு.க.வுக்கு எச்சரிக்கை

ஆசிரியர்: வ. சுந்தரம்
பக்கங்கள் 14—விலை 3 அணா

இன்பத் திராவிடம் பெற, இளைஞர்களை, இலட்சியப் பாதைக்கு அழைக்கிறது இப் புத்தகம்.

இரண்டு புத்தகங்களும்
கிடைக்குமிடம்:
தீ வெளியீடு,
13, பச்சரிசிக்காரர் தெரு,
மதுரை.

* * * *

கிடைக்கப்பெற்றோம்

பம்பாய் தென் இந்திய ஆதித் திராவிட மகாஜன சங்கத்தின் படிப்படியான வளர்ச்சிபற்றியும், அது பணியாற்றிவரும் காரியங்களின்குறிப்புடன்கூடிய 13ம் ஆண்டு அறிக்கைப் புத்தகம் 38 பக்கங்களுடன் கூடியது கிடைக்கப் பெற்றோம்.

அட்டைப்படம்
"மனிதன்" புகழ்
கிருஷ்ணகுமாரி

தொழில்துறையில் மனிதர் உறவு

ஜி. துரைசாமி (ஜி. டி. நாயுடு.)

இந்த நூறு வருஷ காலத்தில் எந்த வகையான தொழில் துறையிலும் ஜனங்கள் பல்வேறு பாகு பாடுகளுடன் அதிசீக்கிரமாகவும் அதிக லாபந் தரக்கூடியதாகவும் உள்ள வழிகளைக் கண்டுபிடித்து அதனால் தொழில் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இந்த நூறு வருஷ காலத்தில் அடைந்தமுன்னேற்றம் அதற்கு முன்பு ஓராயிரம் வருஷங்களில் அடைந்த முன்னேற்றங்களைவிட அதிகம். மனிதர்களால் செய்ய முடியாத வேலைகளை இயந்திரங்களின்மூலம் செய்யக்கூடிய பல்வேறு சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக தந்தி அல்லது டெலிபோனை எடுத்துக்கொள்வோம், ஒரு சமாச்சாரம் வயர்லெஸ் மூலியமாக 5 அல்லது 6 செகண்டுக்குள் 25 ஆயிரம் மைலுக்குமேல் சுற்றளவுள்ள இந்த பூமியைச் சுற்றிக்கொண்டு வருகிறது. ஆனால் இந்தமாதிரியே 5 அல்லது 6 செகண்டில் ஒரு மனிதன் உலகத்தை சுற்றிக்கொண்டு வந்து, எழுத்து மூலியமாகவோ வேறு எவ்விதத்திலோ சமாச்சாரத்தைக் கொடுக்கவேமுடியாது. பம்பாயில் இன்று மாலை ஒருவர் ஆகாய விமானத்தில் ஏறினால் மறுநாள்காலையில் லண்டன் போய்ச் சேருகிறார். மனிதன் வேறு எந்த விதத்திலும் இவ்வளவு தூரம் இவ்வளவு சீக்கிரத்தில் போய்ச் சேர முடியாது.

சோடா, லெம்ஜூஸ், கோகோ-கோலா முதலியவைகளை இயந்திரங்களால் பாட்டிலில் நிரப்பி, மிஷின்விசையினால் மனித உதவி இல்லாமல் நகர்ந்து வரும்போது பாட்டிலிலுள்ள லெம்ஜூஸ் முதலிய பானத்தில் ஒரு துளி அதாவது 100ல் ஒரு பாகம் அதிகமாகவோ அல்லது கம்மியாகவோ எஸ்ஸென்சு கலந்திருக்குமானால் அந்தப் பாட்டிலை மூடி போடுவதற்கு முன்பு அது வெளியில் தள்ளப்பட்டுவிடுகின்றது. இது தவிர ஒரு அங்குலத்தில் 1000ல் மூன்று பாகம் கனமுள்ள சாதாரண மனிதனுடைய தலை மயிர் ஒரு துண்டு இந்த பாட்டிலில் எங்காவது கலந்திருக்கும் பக்ஷத்தில் அப்படிக் கலந்திருக்கும் பாட்டிலையும் தள்ளிவிடுகிறது. ஒரு நாளில் ஒரு தொழிற்சாலையில் 5 லட்சம் 10 லட்சம் பாட்டில்கள் நிறப்பி மூடி போடும்போது, அவ்வளவையும் இந்த மிஷின்கள் பரீட்சைசெய்துவிடு

கின்றன. எவ்வளவு அற்புதமான கண்ணோடு படைத்த மனிதனு லும் இந்த வேலைகளை இவ்வளவு நுட்பமாகச் செய்ய முடியாது. இன்னும் தொழிலில் மிக பிற்போக்காயிருந்து வரும் நம்நாட்டில், நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும்—நம் ஜனங்களால் பல வாரங்களில் செய்யப்படும் விவசாய வேலைகளை மேல் நாடுகளில் 2 அல்லது 3 மிஷின்களால் ஒரே நாளில் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை உழுதும், விதைத்தும் பயிர்களை அறுவடை செய்தும், தானியங்களைப் பிரித்தும், தூர்த்தியும், அளந்தும் மூட்டைகளில் போட்டும், வீட்டிற்கும் கொண்டுவந்து சேர்க்கப்படுகிறது. முன்காலத்தில்—ஏன்—இப்போதுகூட நம் கையால் ஒருவர் ஒரு வருஷத்தில் நெய்யக்கூடிய அளவுள்ள துணியை, சில மிஷின்களால் சிறிதுநேரத்தில் பஞ்சை நூற்று துணியாக நெய்து மடித்தும் கொடுக்கப்படுகின்றன. இதே மாதிரி அநேக வருஷங்கள் கையால் எழுதினாலும் முடியாத அளவுள்ள செய்தித் தாள்களை ஒரு மணிக்கு 24 மைல் வேகத்தில், நியூஸ்ரீல் பேப்பர், ரோலிலிருந்து வரும்போது அச்சடிக்கப்பட்டுமடக்கி, எண்ணி, டெலிவரி வானில் கொஞ்ச நேரத்தில் தள்ளிவிடுகிறது.

நம் கையால் ஒருமயிரின் கனமுள்ள ஒரு ஊசியையோ, ஒரு கம்பியையோ செய்ய வேண்டுமாயின், அநேக மணி நேரம் அல்லது அநேக நாட்கள் பிடிக்கலாம். ஆனால் ஒரு மயிர்கனத்தில் 15ல் ஒரு பாகமுள்ள ஒரு கம்பி ஒரு அங்குலத்தில் 80000ல் ஒருபாகங்கூட வித்தியாசம் இல்லாமல் மிஷின்களால் ஒருநொடியில் செய்யப்பட்டு விடுகின்றது. இம்மாதிரி மனிதனுடைய அறிவினாலும்முயற்சியினாலும் அநேக சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பலமடங்கான தொழில்கள் அதி சீக்கிரம்செய்யக்கூடிய வழிகளில் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இவ்வளவு அருமையான சாதனங்கள் செய்திருந்தாலும் கூட, சாதாரண அன்றாட வாழ்க்கையில் செய்துகொண்டு வருகிற மிகச் சிறிய காரியங்கள் முதற்கொண்டு ஹைட்ரோஜன் அணுகுண்டு செய்யும் காரியம்வரையிலும் ஒவ்வொரு தொழிலிலும் மனிதனுடைய சம்பந்தம், அந்தந்தஇடங்களில் வேண்டும் அளவிற்கு இல்லாமல் எந்தக்காரியங்களும் நடப்பதில்லை. நடக்கவும் முடியாது என்பது ஒவ்வொருவரும் அனுபவித்துத் தெரிந்த உண்மை. ஆனால் எந்தெந்தத் தொழில்களில், எந்தெந்த இடங்களில் எந்தெந்த மனிதர்கள், எந்தெந்தவகைகளில், எம்மாதிரி சந்தர்ப்பங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை உற்றுநோக்குவோமாயின் ஒவ்வொரு இடத்திலும்ஒவ்வொருகாலத்திலும்மாறுபட்டும், வேறுபட்டும் இருக்கிறதைக் காணலாம்.

சாதாரணமாக தொழில்கள் சீதோஷ்ண ஸ்திதிக்கும், அங்கங்கு வசிக்கும் பலதரப்பட்ட மனிதர்களுக்கும், அங்கங்கு அகப்படுகிற மூலப் பொருள்களுக்கும் தக்கவாறு மாறுபட்டிருக்கின்றன. இந்த மாறுபாடுகளில் சிலநாடுகளில் உள்ளவர்கள் தங்களுடைய விடா முயற்சியினாலும் ஊக்கத்தினாலும் அனுபவத்தில்வந்த அறிவினாலும் தொழில்களை மிக உன்னத நிலைக்கு கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில்—கிழக்கு நாடுகளில் அவ்வளவு வேகமாக எந்தத் தொழிலும் விருத்தியடையவில்லை. இதற்குப பல்வேறு காரணங்கள் உள்ளன. நம்நாட்டில் உள்ளவர்கள் ஜனத்தொகை மிகக் குறைவாக இருந்த அந்தக் காலத்தில் அவர்களுக்கு வேண்டியதற்குமேல் உணவுப் பொருள்கள் கிடைத்து வந்ததால் எந்தத் தொழிலும் அதிகஊக்கம் காட்ட வேண்டிய அவசியம்ஏற்படவில்லை வருஷங்கள் ஆகஆக அதே பழக்கம் தொடர்ந்து வந்துவிட்டது. காலத்திற்கு ஏற்றபடி மாறுதல்கள் செய்துகொள்ளவில்லை. ஆனால் ஜனத்தொகை மட்டிலும் ஏறிக்கொண்டேவந்து அதிக உச்ச நிலையை அடைந்திருக்கும் தற்சமயம்தான் அதை அறிந்து இனிமேல் கஷ்டத்தோடு சமாளிக்க முன்வந்திருக்கின்றோம். மற்றநாடுகளில் உறைபனி, கடும் குளிரினால் கஷ்டப்பட்டு அதைத்



(G. D. N.)

தாங்குவதற்கு வேண்டிய உபகரணங்களையும் மற்றும் அம்மாதிரி காலங்களுக்கு வேண்டியவைகளையும் தயாரிக்கவும், அதைக் காப்பாற்றவும் வேண்டிய வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டபடியால், அவர்கள் தம்முடைய வாழ்நாளில் ஒவ்வொரு நிமிஷமும் ஏதாவது ஒன்றைச் செய்து, அதை விருத்தி செய்துகொண்டே வந்தார்கள்.

மேல்நாடுகளில் எவ்வளவுதான் மிஷின்களும் உபகரணங்களும் தானாகவே இயங்கும்படி கண்டுபிடிக்கப்பட்டு தொழில்கள் நடந்தாலும்கூட, யாராயினும் சரி, தொழிலை செய்யாமலோ கவனிக்காமலோ இன்றும் இருந்ததில்லை. ஒவ்வொருவரும் தான் செய்ய

வேண்டிய தொழில்களை வேண்டுமளவுக்கு, தன் முழு நேரத்தையும் உபயோகித்துச் செய்து கொண்டேதான் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள்கையாளும் உபகரணங்களால் தொழில்கள் முன்னேற்றம் அடைந்து அதற்குப் பெற வேண்டிய ஊதியத்தைப் பெருமளவில்பெற்று, வேண்டிய சவுகரியங்களோடு வாழ்ந்துவருகின்றார்கள்.

நம் நாட்டில் கவனித்தால்— ஏற்பட்டுள்ள கஷ்டங்களை நாம் தெரிந்துகொண்டிருந்தாலும்கூட நம்முடைய தொழில் முறைகளில் நாம் வைத்திருக்கும் சம்பந்தம் வேண்டுமளவுக்குச் சிறந்ததாக இல்லை என்றே கூறலாம்.

கிழக்கு நாடுகளில் நம்நாடும் பல தொழில்களில் முன்னேறி இருக்கிறதென்று சொல்லாமே தவிர, இப்போதுஇருக்கும் நிலைமையைப் பார்க்குமிடத்து நாம் பின்னேறிப் போவதாயிருக்கின்றதாஎன்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. பல தொழில் திட்டங்கள் நமக்கு வேண்டியிருக்கின்றன. ஜனத்தொகையை முன்னேறவிட்டும்தொழில்துறைகளைப்பின்னேறவிட்டும், அதனால் ஏற்படும் முடிவைப் பார்க்கும் போது, நம் தேசம் என்ன நிலைமையிலிருக்குமென்பதைக் கவனித்தால் பயமாய் இருக்கிறது. இதற்கு காரணம் தொழில்துறையில் மனிதனுடைய உறவு அல்லது சம்பந்தம் சீர்குலைந்திருப்பதுதான். இதை நிவர்த்திக்க கவர்மெண்டார் எவ்வளவோ முயற்சிசெய்தும்கூட எதிர்பார்த்த அளவு பயன் பெறவில்லை. இதை அறிந்தேதான் இப்பொழுதுஇருக்கும் மத்தியஅரசாங்க தொழில் மந்திரியவர்கள் ஒரு நூதன தொழில் சட்டத்தைக் கொண்டுவாமுயலுகிறார். அதற்கும்பலமூலைகளிலிருந்தும்எதிர்ப்பு வரலாம். இதில் எவ்வளவு தூரம் வெற்றி கிடைக்குமென்பதைக் கொஞ்சம் பொறுத்துத் தான் பார்க்கவேண்டும்.

இப்போது சில தொழிலாளர்களுடைய மனப்பான்மைகுறைந்த வேலை செய்து அதிக ஊதியம் பெற வேண்டும் என்பதுதான். இந்த மனப்பான்மை நம் நாட்டிற்கு உகந்ததல்ல என்பதைத் தெரிந்திருந்தும்கூட சில தலைவர்கள் இதை வேண்டுமென்றே வாதித்து வருகிறார்கள். தெரிந்தோ, தெரியாமலோ ஒரு நல்ல எண்ணத்தோடு சர்க்காரும் சில சலுகைகளை கொடுத்துவிட்டார்கள். மற்ற தேசங்களில் ஒவ்வொருவரும்கல்விகற்று தொழில் தேர்ச்சி பெற்று அதன் பின்பு ஜனங்களுக்காகச் சட்டங்களை உண்டாக்கினார்கள். நம் தேசத்திலும் அநேக வருஷங்களாக கல்வியோ, தொழில் பயிற்சியோ அல்லது தொழில்களோ உருவாகுமுன்பே அந்தச் சட்டங்களைங் கையாண்டுவிட்டோம். அதனுடைய பலன்கள்தான் இப்

பொழுது நம் தேச முன்னேற்றத்தைத்தடுக்கும் சாதனங்களாய் முடிந்துவிட்டது. தொழிலாளர்கள் தங்கள் நலனையும், தொழில் நலனையும், தேசத்தின் நலனையும் உணர்ந்திருப்பார்களேயானால்நம் தேசத்தில் எந்த இடத்திலாவது ஒரு ஸ்டிரைக்காவது உண்டாவதற்கு காரணமேயில்லை.

தொழிலாளர்கள் கஷ்டங்களுக்குப் பல காரணங்கள் இருக்கலாம். வியாபார மந்தத்தால் தொழில் நஷ்டம் உண்டாகலாம். மூலப்பொருள்கள் குறைவாலோ, அல்லது ஏற்ற விலைகளாலோ தொழில்களுக்குக் கஷ்டம் ஏற்படலாம். இதோடுகூட அங்குமிங்கும், முதலாளிகளும் சில கஷ்டங்களைக் கொடுத்துமிருக்கலாம். மழை, காற்று, நெருப்பு முதலிய இயற்கையின்கொடுமைகளாலும் தொழில்கள் சீர்குலையலாம். ஆனால் இப்போது சில தொழிலாளர்கள் எதற்கெடுத்தாலும் முதலாளிகள்தான்காரணம் என்று சாதிப்பதும், கோர்ட்டுகளுக்குப் போவதும், ஸ்டிரைக்குகள், உண்ணாவிரதங்கள்ஏற்படுத்துவதுமாக இருக்கிறார்கள். சில முதலாளிகளும்கூட ஒவ்வொன்றுக்கும் காரணம் தொழிலாளர்கள்தான் என்று சாதிக்கவும் செய்கிறார்கள்.

தொழிலாளிகள் சரீர சுகத்தோடும், மன நிம்மதியோடும் இருந்தால்தான் தொழில்கள் விருத்தியடையுமென்றும், முதலாளிகளும், தொழிலாளிகளும் தேசமும் விருத்தியடையுமென்றும் சில முதலாளிகள் இன்னும் அறியாமலே இருக்கிறார்கள். தொழிலாளர்களும்முதலாளிகளை ஒருவரைவிரோத மனப்பான்மையோடே கோர்ட்டுக்குப் போய் விவாதித்துக்கொண்டிக்கிறார்கள். இதனுடைய முடிவும் மனக்கசப்பைத்தான் அதிகரிக்கச்செய்கிறது

ஒரு தொழிலாளி சாதாரண உணவைஉண்டு, காற்று, வெளிச்சமுள்ளவீடுகளில் வசித்து, மன ஒற்றுமையோடு முறைப்படி அமைந்துள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்துவந்தால், 30 சதத்திலிருந்து 40 சதம் வரை அதிக வேலை, உற்பத்தியும் கஷ்டமில்லாமல் செய்ய முடியும் என்பதை கண்கூடாகப் பார்க்கலாம். இந்தவிஷயத்தை அநேக முதலாளிகளும் தலைவர்களும் மறந்தேவிடுகிறார்கள். ஒரு தடவை நான் ஒருவகை புள்ளி விபரம்எடுத்தது ஞாபகம் வருகிறது. அதாவது நம் ராஜதானியில் கவர்மெண்டில் வேலை பார்க்கும் எல்லா நபர்களுக்கும் இப்போது 6 மணி நேரம் வேலை செய்ய

அருப்புக்கோட்டை
ஆறுமுகம் களிம்பு
எந்த ரணமாயிருந்தாலும் இதைத் துணியில் தடவி உபயோகித்தால் சீழ் ஜலத்தை வெளியேற்றி ஆற்றும்
அ. ராம. மு. ஆறுமுக பாண்டியனால் தயாரிக்கது.

உட்கார்ந்திருக்கும் பழயகாலத்து ஆசனங்களை புது முறையில் மாற்றி அமைத்தால், ஒருகோடி ரூபாய் மிச்சமாகும் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் என்றால், ரூபாயாகமிச்சமாவதல்ல. ஆனால் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள அதிக வேலையும் அதனால் ஏற்படும்சவுகரியங்களையும்தான் ஒரு கோடி என மதிப்பிடப்பட்டது. அதாவது 25 சதவீதம் அதிக வேலையும் சுத்தமான வேலையும் என்பதே. இதுவுமன்றி சில தொழிலாளர்களும் நமக்கும்ஒரு பங்களா வேண்டும், ஒரு மோட்டார் சைக்கிளோ, காரோ வேண்டும் என்று நினைத்தோ அல்லது அப்படி நினைப்பவர்களோடு சேர்ந்தோ இப்போது எது கிடைத்தாலும் அது பற்றாக் குறை என்று கிளர்ச்சி செய்து கொண்டு, தான் செய்யவேண்டிய தொழிலை சீர்குலைய விட்டு, தொழிற்சாலையில் வீண் காலம் கடத்துவதிலேயே ஊக்கம்கொண்டிருக்கிறார்கள்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் தொழில்துறையிலும், தொழில்பயிற்சியிலும், தொழிற் கல்வியிலும், வேண்டுமளவு விருத்தியடையும்வரை, எந்த அரசியல் கட்சியிலும் எந்தத் தொழிலாளியோ, மாணவரோ, கலந்துகொள்ளக் கூடாது என்பதுதான் எனது அபிப்பிராயம்.

இப்பொழுது பொதுவாக தொழிலாளர்கள், அரசாங்கம் முதலாளி கட்சியைச் சேர்ந்தது என்று சொல்லிக்கொண்டிருப்பதில் மனக் கசப்பும் ஒற்றுமையின்மையும் வளருகின்றதோடு, தொழில்களும் சீர்குலைந்து வருகின்றது.

நாம் பல ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த சுய ஆட்சி வந்த பின்பு நமக்கு எதற்கு கட்சி மனப்பான்மை? முதலாளிகளும் தாங்கள் தேசத்தினுடைய ஒரு பகுதி தொழிலுக்கோ, செல்வத்துக்கோ எக்காரணத்தாலோ ஏற்பட்டுப்போன ஒரு டிரஸ்டி என்பதை மறந்துபோய், சுயநலத்தை தம் கடவுளாக அவர்கள் எண்ணும் பக்ஷத்தில், அதையும்கூட முதலிலேயே ஒழித்துக்கட்ட வேண்டியதுதான். இப்பொழுது மத்திய சர்க்கார் மந்திரி சொல்லுகிற முறைப்படி வேலை செய்பவர்களும் வேலை வாங்குபவர்களும் ஒரே இனந்தான் என்று எண்ணி, கூட்டுறவு மனப்பான்மையோடு தொழில்களை நடத்தி வரும் பக்ஷத்தில் தொழில் பஞ்சம் என்பது மறைந்து தொழிலாளர்கள் பஞ்சம் என்பது உண்டாகலாம்.

நம் ராஜதானியை எடுத்துக் கொண்டுபார்ப்போம். இங்குள்ள ஜனத்தொகையில் ஏறக்குறைய 27 சதம்தான் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கு அடுத்து வீட்டு, குடும்ப வேலைகளில் இதில் பாதிப்பேர் இருக்

கின்றார்கள். இதில் பாதிப்பேர் தான் அதாவது 6 அல்லது 7 சதம்தான் மற்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள். முழு ஜனத்தொகையில் 45 சதம் எந்த வேலையும் செய்யாது வேலைசெய்பவர்களை எதிர்பார்த்தே வாழ்கிறார்கள். எந்தத் தேசத்திலும் சிறு குழந்தைகள், மிக வயது முதிர்ந்தவர்களுமாக 4ல் ஒரு பங்கு அல்லது அதிகபக்ஷம் 3ல் ஒரு பங்குக்குவரை வேலை செய்யாத இனத்தில் இருக்கலாம். ஆனால் நம் தேசத்தில் இப்பொழுது வேலையிருக்கும் 7 சத விகிதத்தோடு இன்னும் 7 சத விகிதம் தொழிலாளர்களாகவோ விவசாயிகளாகவோவரவேண்டியிருக்கிறது இதற்கு கட்சிப் பற்றுகளும் நீங்க, முழுமனதோடும், முழு ஒற்றுமையோடும் இப்பொழுதிருக்கும் .தொழில்களோடு புதுத்தொழில்களை ஆரம்பித்தும் இன்னும்இருப்பவர்களில்குறைந்தது 7 சதம் பேர்களை தொழில்கள் செய்வித்து நம் செல்வத்தை வளர்க்க வேண்டும். நம் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும்என்று சம்பளத்தை 10லிருந்து 20 ஆகவும், 50லிருந்து 100 ஆகவும், 100லிருந்து 200 ஆகவும், இருமடங்கோ அல்லது மும்மடங்கோ உயர்த்திக்கொண்டு செலவுகளை 100க்கு 400ஆக செய்யும்படி ஏற்பட்டுப்போவது வாழ்க்கைத்தர உயர்ச்சி அல்ல. மேற்கு நாடுகளில் ஒருமணிநேர வேலைக்கு 5 ரூபாயும் ஒருநாள்வேலைக்கு 50 ரூபாயும் பெறுகின்றார்கள். அந்த நாடுகளின் சராசரி வருமானம் ஒருஆண்டுக்கு ரூ. 5000 என்கிறார்கள். நமது நாட்டில் ஒருமணிக்கு ஒரு அணா 2 அணா. ஒருநாளைக்கு ஒருரூபாய் இரண்டு ரூபாய். ஒரு வருஷத்திற்கு வருமானம் 250ஆக இருக்கிறது. இது ஏன் மேற்கு நாடுகளின் தரத்துக்கு உயரக்கூடாதுஎன்று கேட்கலாம் நம் நாட்டில் வருமானத்தை அந்த அளவுக்கு உயர்த்தவேண்டியதில்லை. ஆனால் நம்நாட்டு செலவினங்கள் 100ல் இருந்து 400க்குப் பதில் 100ல் இருந்து 50க்குக் குறைக்கப்படுமாயின் நமக்கு இப்பொழுது இருக்கும் வாழ்க்கைத்தரம் மற்ற நாடுகளைவிட உயர்ந்தது என்று மனச்சாந்தியடையலாம். ஆனால் எவ்வாறு இந்த செலவினங்களை குறைப்பதுஎன்பதுதான்கேள்வி. அதற்கு ஒரேபதில் நம்நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் மன ஒற்றுமையோடுசெய்யும்தொழில்களின் உற்பத்திப் பெருக்கமே தான் இதற்கு மருந்து. ஆகவே தொழில்கள்தான்ஒவ்வொருவரையும் காப்பாற்றுவதும் தேசசுகம், மனோ சுகத்தோடு வைத்திருப்பதும் என்பதை உணர்ந்து வித்தியாசங்களை அறவே ஒழித்து ஒன்றுகூடி தேசத்தை முன்னேறச்செய்வோமாக.

திருச்சி வானொலி நிலையத்தார் அனுமதி பெற்று வெளியிடப் பட்டுள்ளது.

பெண்களுக்கு

தெருவிலே திரைப்படம்!

சங்கரி—கலைச்சுடர்

தலைப்பைப் பார்த்தவுடன் வரப்போகும் படத்தைப் பார்க்க வாருங்கள் என்று அழைக்கும் "அழைப்பிதழ்" என்று எண்ணக்கூடும், வாசகர்களில் பலர். அல்ல, நம்மையறியாமல் குருட்டுத்தனமாக நாம்—பெண்கள்—பின்பற்றும்—வெகு விரைவாகக் காட்டுத்தீயைப்போல் நம்மிடைப் பரவி வரும்—ஒரு தீய செயலை வேண்டாமென்று சொல்லும் நல்லுரைக்கான தலைப்பு அது.

பெண்களுக்குத் தனி உரிமையான நான்கு பண்புகள் உள. அவற்றை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று நம்பெரியார்கள் பெயரிட்டு அழைத்துள்ளனர். இந்நான்கும் ஒரு குலமங்கைக்கு அவசியமான, இன்றியமையாத "காவல் அணிகள்." இவைகளை எக்காரணம் கொண்டும் பெண்களிடமிருந்து பிரிக்க முடியாது; கூடாது. ஆனால், இன்றுபுதுமை வேட்கை கொண்டுள்ள, ஏதோ கொஞ்சம் அரைகுறையாய்ப்படித்துள்ள நம் சகோதரிகளில் பலர் "அச்சமும், மடமும், யாருக்கு வேண்டும்" எனும் பாரதியாரின் பாடலை மேற்கோள் காட்டித் தமது பெண்மைக்கே உயர்வு தருவதாய இந்தப் பண்புகளை ஒதுக்கித்தள்ளி நடந்துவருகின்றனர். இவர்களின் இந்த அறியாச் செயலுக்கு மேலும் ஊக்கம் அளிக்க இன்று எவ்வளவோ சாதனங்கள் இருக்கின்றன. ஆபாசப் பத்திரிகைகள், அரை நிர்வாண உருவங்களைக் காட்டும் திரைப்படங்கள், மேல் நாட்டு பண்புஅற்ற நாகரீகத்தைஇங்கே இறக்குமதி செய்து வளர்த்துப் பரப்பும் உல்லாச விடுதிகள் (Pleasure Clubs), நாட்டிய மடங்கள், அழகுப் போட்டிகள் முதலியன அவற்றில் சில.

பாரதியார் "அச்சமும், மடமும் யாருக்குவேண்டும்?" என்று கேட்கும்பொழுது, கொடுமையாளர்களைக் கண்டு அவர்களின் உருட்டல், மிரட்டல்களுக்குப் பணிந்துகொடுக்கும் அச்சமும், அடக்கத் தன்மையும் வேண்டாமென்று சொல்லுகிறாரே தவிர, தனது உயிரினும் மேலாகப் போற்றி ஓம்பப்பட வேண்டிய கற்பை விலைகூறித்திரியும், வீதியிலேயே என்னைப் பார், என் அழகைப் பார் என்று மற்றவர்

களை அழைப்பதைப்போல் இனக்கவர்ச்சி (Sex Appeal) முறையைப் பின்பற்றி உடைஉடுத்துக் கொண்டு அலையுமளவிற்கு அச்சம் வேண்டாமென்று சொல்லவில்லை.

இந்தக்கட்டுரையைப்படிக்கும் பல சகோதரிகளுக்குக் கோபம் கோபமாக வரும்; ஆத்திரப்படுவார்கள்; இவள் ஒரு பெண்ணா? தன் இனத்தைப்பற்றி இப்படி எழுதுகிறாளே? என்றெல்லாம் கேட்கத் தூண்டும்! நான் ஒரு பெண்ணானபடியால்தான் என் இனம் தன்னையே அழித்துக் கொண்டு இழிந்தநிலையை அடையக்கூடாதென்ற கவலையுடன் இக்கட்டுரையை இவ்வளவுதிறப்பாக எழுதுகிறேன்!

படைப்பிலே பெண்களுக்குக் குழந்தைகளுக்குப் பாலூட்டவும் தன்னை மணந்தவனுக்கு இன்பமளிப்பதற்காகவுமே ஸ்தனங்கள் அளிக்கப்பட்டுள்ளன; அவர்களுக்கு அழகளிப்பவற்றுள் மார்பு அழகும் ஒன்று. காமக்கண்ணுள்ள ஆண்களுக்கு ஒருபெண் அழகாகத்தோன்றுவதற்கு இந்த ஸ்தனங்களும் காரணம். ஆம், ஆண்களின்துராசையைத் தூண்டுவதில் முக அழகைவிட இந்த மார்பகம் அதிகப் பங்கைக் கொண்டுள்ளது. எல்லா தேசப் பெண்களுக்கும் இந்த அமைப்பு ஒரே விதத்தில்தான் உள்ளது என்றாலும் தமிழ்நாட்டுப் பெண்களைப் பொருத்தவரை இந்தப் படைப்பு அளித்த தனம் பெரிதும் உயர்ந்த கருத்துடையது. அதனால்தான் தமிழ்சமூகத்தைச் சேர்ந்த 4 வயதுப் பெண்கூட தன் மார்பை மூடி மறைக்காமல் வெளியில் திரிவதை விரும்பாததற்குக் காரணம். ஒரு பெண்ணின் பண்பட்ட தன்மையை, ஒரு சமூகத்தின் நாகரீக மேன்மையை அவள் தன் மார்பகத்தின்மேல் எவ்வாறு உடையணிந்துள்ளாள் என்பதைக் கொண்டு தீர்மானிக்கலாம் என்று பழம் பாட்டிகள் சொல்லக் கேட்டுள்ளோம். இந்தவகைகளில் பார்த்தால், நம் தமிழ் சமூகப் பெண்கள் எந்த நாட்டவர்களையும்விட அதிகமான பண்பாடு உடையவர்கள் என்பது அவர்களின் உடை மூலம் நிருபணமாகும். ஆனால் இன்று, "விடுதலை" விழையும் நம் அரைகுறைப் படிப்பாளிப் பெண்கள், பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன், பட முதலாளிகளின் "பண ஆசையைப்"பூர்த்தி செய்வதற்காக தமது மார்பை "பிரேசியர்" வைத்துக் கட்டிக்

கொண்டு மேல்துணி இல்லாமல் பார்ப்பவரின் கீழ்த்தர உணர்ச்சியைக் கிளறி, மேலும் மேலும் பார்க்கச் செய்வதற்காக, அதன் மூலம் தாம்நடித்த படங்களுக்கு அதிகவசூல் வரவேண்டுமென்று விரும்பும் நடிகைகளின் போக்கைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி, நடுவீதியிலே, பட்டப் பகலிலே கடைகளுக்குச்சாமான் வாங்கச் செல்கையிலே, தன் கணவன் தவிர்த்த மற்ற ஆண்களின் முன்னாலே தம் மார்பின் அழகைக் காட்டிக்கொண்டு, சல்லாத் துணிகளை அணிந்து, அணிநடை போடுகின்றனர்! அப்பப்பா! என்ன ஆபாசம்!! தம்மையே இப்படித் தாழ்த்திக்கொள்ளலாமா? பார்க்கும் ஆண்களின் பேய் ஆவலைக் கிளறிவிட்டு, அவர்களின் காமத்திற்கு இரையாகி, கற்பை இழக்கலாமா? ஐயோ! என்ன ஆபாசம், நம் சோதரிகளின் இன்றைய உடையலங்காரம்!

இந்த நோய் அறியாப் பெண்களிடம் பரவுவதற்குக் காரணம் இன்றைய சமூகத்தின் இழிநிலையும், முறையும்தான்! எதிர்காலப் பெருமக்களை ஈன்று, பயிற்றப் போகும் சோதரிகள் இந்தத் தீய பழக்கத்தைக் கைவிடவேண்டும். தமது பெண்மைப் பண்பைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இந்தக் கூடாத பழக்கம் அதிகமாகப் பரவக் காரணம் அறியா இளம் சோதரிகளின் செயல்கள் மட்டிலுமல்ல, அறுபது வயதான நம்பாட்டிக் "குமரிகளும்" இந்த இனக் கவர்ச்சி (Sex Appeal) முறையைப் பெரும்படியாகப் போற்றிப் பாதுகாக்க முன்வந்திருப்பதும் ஒன்றாகும்!

தமிழ்த் தாய்மார்களே, சகோதரிகளே, குலமங்கையர்களே, இனக் கவர்ச்சி முறை நமக்கு ஏற்புடையதல்ல; திரையிலே நடிக்கும் பெண்களும்கூட, பணத்திற்காகத் திரையிலே அப்படி நடித்தாலும், தெருவிலே நடக்கும்பொழுது, தமது மடத்தைப், பயிர்ப்பைப் பேணியே நடக்கின்றனர். அப்படியிருக்கக் குலநங்கையராகிய நாம் இந்தத் தீய பழக்கத்தைக் கைக்கொள்ளலாமா? கூடாது! அதைக் கைவிட்டு மடமங்கையராக, நமது மாண்பை எடுத்துக் காட்டும் உடையணிந்து பார்ப்பவர்கள் போற்ற நடந்துகொள்ளுவோமாக! வாழ்க தமிழர் பண்பு! வளர்க நற்பெண்மை!! ஒளிர்க உள்ளழகு! ஒழிக ஆபாச உடையலங்காரம்!! வாழ்க பெண்மை!!!

★

16 நாளில் ரூ. 3354090!

பிராந்திய ரயில்வேக்களில் ஏப்ரல் 1வ முதல் 16 முடிய இஷ்டம்போல் 14நாட்கள் பிரயாணம் செய்ய வழங்கப்பட்ட 30 ரூபாய் டிக்கெட் மூலம் வசூலாகியுள்ள தொகை ரூ. 3354090 என்று ரயில்வே மந்திரி திரு. ஓ. வி. அழகேசன் அறிவித்துள்ளார்.

படிப்பும் பாவையும்!

மகிழ்ச்சி சதானந்தம்

ஊரிலிருந்து வந்த மறுநாள், முதல் வேலையாக தனது நண்பனைக் காண அவன் இல்லம் ஏகினான் பன்னீர்ச்செல்வம். "வீட்டில் இருக்கிறாரா? இன்னார் பார்க்க வருவதாகச் சொல்லி அனுப்பினார்கள்" என்று முன் கூட்டியே ஆள் அனுப்பி பேட்டி காணும்படியான கலெக்டர் உத்தியோகமோ, அல்லது மந்திரி பதவியோ பார்ப்பவன் அல்ல அவன் நண்பன். இவனைப்போல் நவதானியம், மளிகைக் கமிஷன் வியாபாரம் செய்து வருபவன் தான்.

பொருளாதாரச் செழிப்பால், வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ள அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய மேல்நாடுகளிலானால், வீட்டின் முன்வாசலில்உள்ள 'காலிங் பெல்' பொத்தானை அழுத்த, அடுத்த சில விநாடிகளில் 'கம் இன்' என்று உள்ளேயிருந்து உத்தரவு வர, பின் வந்தவர் உள்ளே செல்ல—இப்படி இருக்குமாம். ஆனால் இங்கே......

"அழகிரிசாமி!" என்று பலமாகக் கூவிக்கொண்டே அவன் வீட்டினுள் நுழைந்தான். ஹாலில் அழகிரியின்தகப்பனார் ஈசிச் சேரில் அமர்ந்திருந்தார். அருகில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்த ஒரு இளம்பெண், இவன் வந்ததைக் கவனித்ததும் எழுந்து வீட்டின் பின்பக்கம் சென்று மறைந்தாள்.

"யார்? பன்னீர்ச்செல்வமா! வாப்பா! இப்படிஉட்கார். என்றைக்கு ஊரிலிருந்து வந்தாய்? எல்லோரும் சௌக்கியமா? குழந்தைகள் எத்தனை இருக்கு? வியாபாரமெல்லாம் எப்படிநடக்கிறது? திடீரென்று பார்த்தவுடன் ஆள் அடையாளம்கூடத் தெரியவில்லையே!" இப்படி ஒரே மூச்சில் அவ்வளவையும்கேட்டார்

"ஆமாம், ஆள் கொஞ்சம் பருத்திருக்கிறேன். நேற்று என் அம்மாகூட முதலில் பார்த்த பொழுது திகைத்துவிட்டார்கள். வருடம் பத்து ஓடிவிட்டது பாருங்கள்"

"என்ன! நீ கல்கத்தா சென்று பத்துவருடங்களா ஆகிவிட்டது! நேற்று மாதிரி இருக்கிறது எனக்கு"

"உங்கள் அருகில் இருந்து சென்ற பெண்......"

"என் பேத்தி... அழகிரியின் மகள்!"

"யார்? நாகம்மாளா! சிறு

பிள்ளையில் பார்த்தது. இப்பொழுது பள்ளியில் படித்துக்கொண்டிருக்கிறாளா?"

"பத்து பாஸ்செய்துவிட்டாள். அத்துடன் நிறுத்திவிட்டேன். இனி நடப்பாக நல்லமாப்பிள்ளையாகப் பார்த்துக் கல்யாணம் செய்யவேண்டியதுதான்"

"வயது குறைவாகத்தானே இருக்கும். இன்னும் கொஞ்சகாலம் படிக்கவைக்கலாமே!"

"16 வயதாகிறது. எட்டாவது படித்துக்கொண்டிருக்கும்போதே பெரியவளாகிவிட்டாள். நம் நாட்டு சீதோஷ்ணம் 12, 13 வயதுநிரம்புவதற்குள் பெண்களை தாய்மைக்கு தயாராக்கிவிடுகிறது இவளை அப்பொழுதே பலர் பெண்கேட்டு வந்தார்கள். வீட்டில் உள்ள பெண்களுக்குக்கூட ஆசைதான். ஆனால் நான்தான் அவளது வயதையும், பிஞ்சி உடம்பையும் எண்ணி, ஒரேயடியாகமறுத்து, 10 முடிக்கும்வரை படிக்கட்டும் என்று திட்டமாகக் கூறிவிட்டேன். இல்லை என்றால் இப்பொழுது இவள் ஒன்று, இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகி இருப்பாள்" என்று கூறிச் சிரித்தார்.

"நல்ல காரியம் செய்தீர்கள். அப்படியே, கல்யாணம் வரும் வரை காலேஜிலும் படிக்கவைக்க உங்களைப் போன்றோர் முன்வந்தால் நல்லதல்லவா?"

"காலேஜா! அதுவும் பெண்களையா!" என்று கூறிக்கொண்டே இருகைகளாலும் இரு காதுகளையும் பொத்திக்கொண்டார்.

அவரது செய்கை அவனுக்குப் பெரிதும் வியப்பைக்கொடுத்தது. "ஏன், பெண்கள் காலேஜில்படிக்கக்கூடாதா?" என்றான்.

"படிக்கட்டும். ஆனால் என் போன்றாரது வீட்டுப் பெண்களுக்கு மட்டும் காலேஜ் படிப்பு வேண்டாம். 10 வரை படித்தாலே போதுமானது என்பது எனது சொந்த அபிப்பிராயம்"

"அது என்ன, படிப்பில் எங்க வீட்டுப் பெண், உங்க வீட்டுப் பெண் என்று இருக்கிறது!"

"உனக்குக் கொஞ்சம் அனுபவம் போதாது இந்தவிஷயத்தில். கொஞ்சம் கவனி: என் போன்றார், பெண்களைக் காலேஜில் படிக்கவைத்து, அதுகள் சம்பாதித்துத்தான் காலத்தை ஓட்ட வேண்டுமென்று இல்லை பாரு. ஆனால் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் பெண்கள் நன்குமேலே படித்து, சம்பாதித்தால்தான் கௌரவம், மதிப்பு, நல்லவரனும் வரும். அப்படிப்பட்டவர்கள் அவசியம் காலேஜ்களில் படிக்க வேண்டியதுதான். அவர்களது வாழ்க்கையின் பின் பகுதியின் செழிப்பு அவர்களின் படிப்பிலும், அதன் நிமித்தம் வரும் வருவாயிலும்தான் இருக்கிறது"

"அவர்கள் வருவாய்க்காகப் படித்தால், நாம் நம் பெண்ணின்

அறிவு வளர்ச்சிக்காகப் படிக்க வைக்கலாம் அல்லவா?"

"ஆமாம், இப்ப இருக்கிற கல்வித்திட்டம் பெரிய அறிவைத் தான் கொடுக்கிறது! வெள்ளைக் காரன் வெளியேறி ஐந்து ஆண்டுகள் போயும், அவன் வைத்து விட்டுப்போன 'கிளர்க்' உத்தியோகப்படிப்பில் கொஞ்சமாவது மாற்றம் இருக்கிறதா? (a+b)2 திஸ் ஆங்கில் இஸ் ஈக்வல் டு தேட் ஆங்கில். இது தானே ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்றைக்கும் பாடம். எத்தனை பெண்கள் இதுவரை எஞ்சினீயராக வந்திருக்கிறார்கள்?

காலேஜ் விஷயமோ கேட்க வேண்டாம். சம்பாத்தியத்திற்காகவும், பவிசுடன் பட்டம் போட்டுக்கொள்ளவுமே பெண்களைப்பொருத்தவரை இருக்கிறது. ஏன், ஆடவர்களும் அப்படித் தான். பெண்களைக் குடும்ப நிர்வாகத்திற்குத் தகுதியுடையவர்களாகச் செய்வதில் ஒரு சிறிதாவது கல்வி போதிக்கப்படுகிறதா?

அங்கு படிப்பதாவது ஒழுங்காகப் படிக்கிறார்களா? ஏதோ பணச் சுரங்கம் வீட்டில் இருக்கிறது; அதை நாம் தாராளமாக அனுபவிக்கப் பிறந்துள்ளோம் என்று தண்ணீர்பட்ட பாடாகப் புழங்குகிறார்கள். காலேஜ்வாழ்க்கையைப்போன்ற 'பொற் காலம்' இனி வாழ்க்கையில் திரும்ப வராது என்ற மனப்பான்மையில் மிதந்து உலாவுகிறார்கள்"

"எல்லோரும் அப்படி ... விடுவதில்லையே"

"ஜனநாயகமுறைப்படி ... மான பேர்கள் அப்படி நட... கொள்கிறார்கள். உனக்கு வே... ஜோலி ஒன்றுமில்லையே"

"அப்படி ஒன்றுமில்லை. ஏன், ஏதும் விசேஷம் உண்டோ?"

"நிகழ்ந்த சம்பவம் ஒன்று கூறுகிறேன், கேள். எனக்கும் பொழுது போனால்போல் இருக்கும்; அதற்குள் அழகிரியும் வந்துவிடுவான்" என்று கூறிக் கொண்டு, தன் பேத்தியை அழைத்து காபி கொண்டுவரச் சொல்லி அனுப்பினர்.

"பெண்களை அறிவு வளர்ச்சிக்காக கல்லூரிகளில் படிக்கவைக்

பீடி பிடித்த மனைவிக்குத் தீ!

பம்பாயில் இரு போலீசார் வழி நெடுக சென்றுகொண்டிருக்கையில் ஒருவீட்டில் உயரமாக தீ எரிவது தெரிந்தது. சென்று பார்க்கையில் ஒரு ஸ்திரீயின் உடம்பில் தீப்பற்றி எரிவது தெரிந்தது. உடனே அந்த ஸ்திரீ ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டாள். இறுதியில் மூன்று மணி நேரங் கழித்து இறந்துவிட்டாள்.

இந்த ஸ்திரீ பீடி குடிப்பதை யொட்டி அவளது கணவனுடன் அடிக்கடி சச்சரவு நேருமாம். அவள்கணவன் ஒருதொழிலாளி. மனைவி பீடி பிடிப்பதை கண்டித்ததில் ஏற்பட்ட சச்சரவு முற்றி கணவன் அவளது உடையில் நெருப்பு வைத்துவிட்டான்.

...என்று சொன்னாயே, ...வைத்துத் துன்பப்பட்ட நண்பரின் குடும்பப் படலத் ...கேள்: அவர் நல்லபணக் ...ர், படித்தவர். முற்போக்கு ...தியும்கூட. அடுத்தடுத்துப் பிறந்த மூன்று குழந்தைகள் அவருக்கு. மூத்தவள் பெண். பையன் இரண்டாவது. மூன்றாவது பெண். ஓரே பையனானபடியால், செல்வமாகவளர்ந்தான். அவனை பீ. ஏ. வரை படிக்க வைக்க வேண்டுமென்பது அவர் ஆசை.

ஆனால் பணக்காரப் பையன்களுக்கும், படிப்பிற்கும் அனேகமாக ஏழாம் பொருத்தம்தானே! எப்படியோ ஆண்டுக்கொருமுறை தூக்கிப்போடப்பட்டு பத்தாவது வகுப்பை மிதித்துவிட்டான். 'என்மகனும் பத்துப் படித்திருக்கிறான்' என்ற நிலையுடன் அவன் தனது தகப்பனாரின் உதவிக்குக் கடைக்குவந்துசேர்ந்துவிட்டான்

ஆனால் இவனுக்கு நேர் எதிரிடையாக அந்த மூத்த பெண் படித்துவந்தாள். வகுப்பில் யார் முதல் மார்க் என்றால், இவள்தான்! பள்ளிக்கூட தலைமை ஆசிரியை கல்யாணம் செய்துகொள்ளாத கன்னிப்பிள்ளைகளுக்குப் பாடங்களை நன்கு சொல்லிக்கொடுத்துவந்ததுடன், காலேஜில் படிக்க வேண்டிய அவசியத்தையும் அறிவுறுத்திஇருக்கிறாள் அத்துடன் கல்யாணத்தில் சிக்கி குடும்பசாகரத்தில்அமிழ்ந்து தத்தளிக்க முற்பட்டு அவஸ்தைக்குள்ளாகாதீர்கள் என்றும்—மணவாழ்க்கையில் அடிபட்டு அல்லலுற்றவள்போல்—படிப்படியாக, குழந்தைகளின் பிஞ்சு உள்ளத்தில், வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் கூறிவைத்திருக்கிறாள்.

அந்தப் பெண் 10 பாஸ் ஆனதோ இல்லையோ, கட்டாயம் காலேஜ் போய்த்தான் தீருவேன் என்று ஒற்றைக் காலில் நின்றுவிட்டது. அவள் தாயாருக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லை. தகப்பனாருக்கோ துப்பவும் முடியவில்லை; விழுங்கவும் முடியவில்லை. முடிவாகப் 'பையனுக்குத்தான் படிப்பு சரியாக வரவில்லை, பெண்ணாவது படிக்கட்டும். அவள் ஒரு பையனாகஇருந்தால், படிக்க வைப்போம் அல்லவா!' என்று காலேஜில் கொண்டு சேர்த்துவிட்டார்.

நாட்கள்நகர்ந்ததுபோல், அவளதுநாகரீகமும் வளர்ந்துவந்தது. அவள் அறிவு விருத்தியானது போல்(?) தலைப் பின்னல்கூட இரண்டானது. அடக்க ஒடுக்கமான ஆடை போய் ஆடம்பரமான, அனாயாசமான மெல்லிய ஆடைகள் மிளிர்ந்தன. காலேஜில்படிப்பவள் என்பதால், வீட்டில்பெற்றோர்களிடமும், உடன்பிறந்தோர்களிடமும்கூட ஒரு தனி கௌரவத்தை எதிர்பார்த்தாள். சுருங்கச் சொன்னால் யாரும் தட்டிக் கேட்க முடியாத

நிலைக்கு மாறிவிட்டாள்.

இதற்கிடையில் அடுத்தபெண் வளர்ந்துவிட்டாள். இவளுக்கு அவ்வளவாக படிப்பு வரவில்லை. பள்ளிக்குப்போவதென்பதுஜெயிலுக்குப்போவதுபோல் இருந்தது போலும் ஆள் மூத்தவளைவிட கொஞ்சம்எடுப்பாக,லக்ஷணமாக இருந்தபடியால் பெண் கேட்க வந்துவிட்டார்கள் பலர். தட்டிக் கழிக்க முடியாத பல பெரிய இடங்களிலிருந்தும் வந்தது.

மூத்தபெண் இருக்க இளைய பெண்ணிற்கு எப்படிச்செய்வது என்றபிரச்சனை வந்துவிட்டது. கடைசியாக மூத்தவளின் சம்மதம் பெற்று—இதில் ஒன்றும் அவள்தயங்கவில்லை. மிகக் குதூகலத்துடன் சம்மதம் தெரிவித்தாள்—ஆடம்பரத்துடன் அக்காளிருக்கத் தங்கைக்குத் திருமணம் நடைபெற்றது.

ஆண்டுஒன்று ஓடியது. இளையவள் இல்லற வாழ்க்கைக் கல்லூரியில்நீந்தி குழந்தைஒன்றைப் பெற்று "தாய்மை"ப் பட்டம் பெற்றாள். மூத்தவள் கல்லூரிப் படிப்பில் பி.ஏ. பட்டம்பெற்றாள். இவள் பி. ஏ. முடிப்பதற்கு ஏற்பட்ட செலவும், இளையவளுக்கு ஏற்பட்ட கல்யாணச் செலவும் ஏறக்குறைய ஒன்றாகஆகியிருக்கிறது என்று தமாஷாக என் நண்பர் என்னிடம் கூறியிருக்கிறார்.

பி. ஏ. முடிந்தது. இனி எம். ஏ. இதுவும்கூட அவளுக்கு ஆசைதான். ஆனால் அவள் தந்தை கண்டிப்பாக மறுத்துவிட்டார். மேலும் அவர்கௌரவம் அவளை எந்த வேலைக்கும் அனுப்பவிடவில்லை. வீட்டிலேயே இருந்தாள். பெற்றோர்கள் மாப்பிள்ளை தேடும் மும்முரத்தில் முனைந்தார்கள். நானும் கூட ஈடுபட்டேன்.

அன்றாடம் மார்க்கெட்டிற்கு வரும் காய்கறியா, போனதும் பிடித்தமானதைக் காசுகொடுத்து வாங்கிவந்துவிட! இது ஆயுள் பரியந்தம் பிணைக்கப்படும் ஆண் பெண் இருவரின் இல்லறவாழ்வு இணைப்பு அல்லவா!

மேலும் இவளோ பி. ஏ. படித்தவள். எனவே இவளை அனுசரித்து படித்த பையனைப் பார்க்கவேண்டும். ஆனால் இந்தக் காலத்தில் படித்துப் பட்டம் பெற்றவன், அவனையொத்துப் படித்த பெண்ணையா துணைவியாக்க விரும்புகிறான்? அப்படி விரும்புகிறவன் அனேகமாக அப்பாவியாகத்தான் இருப்பான்! இப்படி இருக்கிறது இன்றைய படித்த மாணவர்உலகம். படித்த பெண்களைக் கண்டு ஏன் இப்படிப் பயப்படுகிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை!

காலச்சக்கரம் இவள் கல்யாணத்தை எண்ணி சுழலாமலா நின்றுவிடும்! பிள்ளையார் பெண் பார்த்த புராணக்கதைபோல இவளுக்கு மாப்பிள்ளை பார்த்துப் பார்த்து வருடங்கள் மூன்று

முடிந்துவிட்டது. இளையவளின் குழந்தைகள் எண்ணிக்கையும் மூன்றை எட்டிவிட்டது.

புத்தகங்களை புரட்டித் திரியும் நேரம் தவிர மற்ற நேரங்களில் தன் தங்கையின் பிள்ளைகளை அலங்கரிப்பதிலும் அவர்களுடன் குலாவுவதிலுமாகத் தன் பொழுதைப் போக்கிவந்தாள் மூத்தவள். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றபடி அவளது முகமேகாட்டிவிட்டது அவளது ஏக்கநிலையை. உடலும் இளைக்க ஆரம்பித்தது. இதைக் காணும் பெற்றோர்களின் மனநிலை எபபடி இருக்கும்?

அவள் தகப்பனருக்கு மற்றொரு கவலையும் சேர்ந்துகொண்டது. பையனும் நிமிர்ந்துவிட்டான். அவனுக்குப் பெண் கொடுக்க பலர் விரட்டி விரட்டி வந்தார்கள். அவனும் மூக்கு வேர்த்துத்தான் திரிந்தான். ஒன்று எனக்குக்கல்யாணத்தைச் செய்து வைத்துவிட்டு மறுவேலையைப்பாருங்கள் என்று அவனே கூறமுற்பட்டுவிடலாம், அல்லது வயதுக்கோளாறுல் தவறுன வழிகளில் இறங்கி உடம்பை கெடுத்துக்கொள்ளலாம் என்ற எண்ணமே அவரைச் சஞ்சலத்திற்குள்ளாக்கியது.

மனிதன் பித்துப் பிடித்தவர் போல் ஆகிவிட்டார். பிறகு நான்தான் அவரைச் சமாதானப் படுத்தி 'நடக்கிற விதமாக நடக்கட்டும்' என்று கூறி பையனுக்கு முதலில் கல்யாணத்தைமுடித்தோம்.

பையனின் கல்யாணயோகமோ என்னமோ தெரியவில்லை. மறுமாதத்திலேயே அவளுக்கும் கல்யாணம் வந்துவிட்டது. பையன் டாக்டர். M. B, B. S.யை அவ் வாண்டுதான் முடித்திருந்தான். சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். கல்யாணச்செலவு முதல் மாப்பிள்ளைக்கு புதிதாக ஆஸ்பத்திரி வைத்துக்கொடுக்கும் செலவு உள்பட சகலத்தையும் எனது நண்பரே ஏற்றுக்கொண்டார்.

ஏக ஆர்ப்பாட்டத்திற்கிடையில் சீர்திருத்த முறையில் பிரமாதமாக கல்யாணம் நடைபெற்றது. பலஆண்டுகளுக்குப்பிறகு, அன்று இரவுதான் என் நண்பர் நிம்மதியாகத் தூங்கினர் என்று கூடக் கூறலாம்.

கல்யாணத்தை முடித்த மறுவாரமே மாப்பிள்ளை சென்னைக்குக் கிளம்பிவிட்டான், படித்த இடத்திலேயே ஒருவருடத்திற்கு வேலை பார்க்க வேண்டுமென்ற கட்டாயம் இருந்தபடியால். அதன்பின் இடைஇடையே விடுமுறை நாட்களில் வந்து செல்வான்.

இப்படி அவன் ஒருசமயம் ஊருக்கு வந்திருந்தபோது அவனுக்கு ஒருதபால் வந்திருந்தது. அது அவனுடன் படித்து வேலை

செய்துகொண்டு இருக்கும் ஒரு பெண்ணினுடையது. அதை இவளும் வர்சித்திருக்கிருள். அதில் குற்றம் காணும்படியாக ஒன்றும் இல்லையானாலும், இவளுடைய நெஞ்சின் ஒருஓரத்தில் நஞ்சுபோன்று விஷவித்துஒன்று தெறித்துவிழுந்து முளைக்கிளம்பலுற்றது.

மெடிக்கல் கல்லூரி என்பது, சினிமா சூட்டிங் நடக்கும் ஸ்டுடியோ போன்றது. ஆண்பெண் இருபாலரும் வித்தியாசமின்றி, நெருங்கிக்காரியமாற்றி, திறமை, வலிமை, சாதுர்யம் இவைகளால் தங்களை உயர்த்திக்கொள்ளப் பாடுபடவேண்டிய இடம். இது இவளுக்கும் நன்கு தெரியும். இருந்தும் மெடிக்கல் கல்லூரிகளில் நடைபெறும் லீலா விநோதங்கள் குறித்து தன் தோழிகள் மூலம் தெரிந்து வைத்திருந்த காரணத்தால், தன்கணவன்மீதும் ஒருவித சந்தேகம் தோன்றிவிட்டது.

ஒருவர்உள்ளத்தில் ஒருமுறை சந்தேகம் தோன்றிவிட்டால், பின் அது உயிர் பிரியுமளவும், அவர்கள் எண்ணத்தைவிட்டு விலகாது. இதில் இவள்மட்டும் என்ன விதிவிலக்கா? இவள் படித்த பாவையாகையால் இன்னும் ஒருபடி அதிகமாகவே போய்விட்டாள். அந்தப்பையன் எவ்வளவோ எடுத்துக் கூறியும் இவள் ஏற்றுக்கொள்ளவில்லை''

''அடடே, படித்திருந்தும் இவ்வளவு முட்டாள்தனமாகவா நடந்துகொண்டாள்? பிறகு என்ன நடந்தது!'' என்றுன் பன்னீர்ச்செல்வம்.

''நடப்பதென்ன? 'மெத்தப் படித்தால் சுத்தப் பைத்தியம்' என்பார்களே, அதே கதைதான். அந்தப்பையன் அப்புறம் அங்கு வருவதையே நிறுத்திக்கொண்டான். இவள் வீட்டிலேயே நடைப்பிணமானுள். பின் அதிக நாள் அவளும் இருக்கவில்லை. சந்தேக விஷம் அவளைச் சாப்பிட்டேவிட்டது. இதனுல்குடும்பத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பு அடங்க பல ஆண்டுகள் ஆகிவிட்டது''

அகதிகள் பிரச்னைச் செலவு!

பாகிஸ்தானில் இந்தியர்விட்டு வந்த சொத்துக்களின் மதிப்பு ரூ. 625 கோடி. விவசாய உடைமைகளையும் சேர்த்தால் மொத்த மதிப்பு ரூ. 4000 கோடி.

இந்தக் கணக்கைத் தயாரிக்க இந்திய காரியாலயம் 40 லட்சம் கடிதங்களை ஆராய்ந்தது. 12லட்சம் தஸ்தாவேஜுகளைக் கவனித்தது. 30 லட்சம் மனுபாரங்களை அச்சிட்டது. 2250 சிப்பந்திகள் இவ்விசாரணைகளை நடத்தினர். விசாரணை நடத்த ரூ. 115லட்சம் செலவாயிற்று. 270 அதிகாரிகள் 40 லட்சம் மைல் தூரம் பிரயாணம் செய்து தகவல்களைச் சேகரித்தனர்.

"இறந்தா போய்விட்டாள். பாவம்! ஆமாம் இப்படி ஏதோ ஒரு இடத்தில் நடந்ததென்பதற்காக எல்லோரையும் ஒரேவிதமாக நினைத்துவிடுவதா?" என்று தனது ஆரம்ப விவாதத்திற்குத் திரும்பினன் செல்வம்.

"எல்லோரையும் நான் கூறவில்லையே. டாக்டர் உபாத்திமை முதலிய தொழிற்கல்வியை மேற்கொள்ளுகிறவர்கள்பற்றி நான் கூறவில்லையே. அவர்கள் தாராளமாகப் படிக்கட்டும். அறிவு வளர்ச்சிக்காக என்று காலேஜில் படிக்கவைக்கவிரும்பும்நம்போன்ற குடும்பத்தினருக்குத்தான் கூறுகிறேன்—பெண்கள பத்துவரை படித்தாலே போதும் என்று.

ருது ஆனாலும், ஆகாவிட்டாலும் பத்துவரை படிக்க வைக்க வேண்டியது என்பதை நான் ஆட்சேபிக்கவில்லை அதைக் கட்டாயப்படுத்தவும் வேண்டுகிறேன். ஆனால் காலேஜில்சேர்ந்து பி. ஏ. பட்டம் வாங்கவேண்டும் என்று விரும்பும் அந்த நான்கு வருடங்களில், வீட்டில் இருந்து குடும்ப நிர்வாகப்பயிற்சி பெறட்டும் என்றே கூறுகிறேன்.

எனது சொந்த அனுபவத்தில் நான் கூற விரும்புவது என்னவென்றால் வாழ்க்கைத் தொடர்பற்ற இக்காலக் கல்வித் திட்டப்படி, பெண்களைக் காலேஜில் படிக்க வைக்க விரும்பும் பெற்றோர்கள், பின்னால் அவர்களுக்குக் கட்டுப்பாடுவிதிக்காது சகல விஷயங்களிலும் சுதந்திரம் கொடுத்துவிடவும் தயாராகிவிட வேண்டும் என்பதுதான்.

இடையில் ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே! இறந்த அந்தப் பெண் படிக்கும்போது ஒரு கல்லூரி மாணவன்மீதுகாதல்கொண்டிருந்திருக்கிறாள். காதலுக்குத்தான் ஜாதி, மதம், ஏழை, பணக்காரன்என்ற பாகுபாடே கிடையாதே! அவன் வேறொரு சாதியாம். கலப்பு மணத்திற்குச் சம்மதிக்கும்அளவிற்கு இக்காலத்து சீர்திருத்தம்பேசும் பெற்றோர்கள் கூட திருந்தவில்லையே! இவள் தகப்பனார் மறுத்துவிட்டார்"

"ஒரு அருமையான, தத்துவார்த்த விஷயத்தை உங்களிடமிருந்து இன்று தெரிந்துகொண்டேன். ஆனால் என்வரைக்கும் இந்தப் பிரச்னைக்கு இடம் வைத்துக்கொள்ளும்படி எனக்கு பெண் குழந்தை ஒன்று கூட இல்லை" என்று கூறி ஒரு பெருமூச்சுவிட்டுக்கொண்டே "ஆமாம் இன்னும் அழகிரியைக் காணோமே? எங்கு சென்றிருக்கிறான்?" என்றான் பன்னீர்செல்வம்.

அப்பொழுது அழகிரியும் உள்ளே நுழைய, நண்பர்கள் இருவரும் அளவளாவிக்கொண்டே மாடிப்படியில் ஏறிச் சென்றார்கள்.

★

ஆண்களுக்கு

[இரண்டு கைகளையும் தட்டினால்தான் சப்தம் உண்டாகும். ஆடவர்களே அதிகமாக எழுதிக்கொண்டும், பெண்களைக் கிண்டல் செய்துகொண்டும் இருந்தால், உண்மை புலப்படாது. இதை உத்தேசித்தே தங்களுக்குள் குமுறிக்கிடக்கும் எண்ண மணிகளை 'மகிழ்ச்சி'ப் பூமியில் தூவி விதைக்க நம் சகோதரிகளை சென்ற இதழில் அழைத்தோம்—அவர்களுக்கென இடம் ஒதுக்கி. கூட்டி அள்ளும் அளவிற்குக் குவித்துவிட்டார்கள்! மிக்க மகிழ்ச்சியுடன், அவர்களுக்கு வாழ்த்துக்கள் வழங்கி வரவேற்கிறோம். இதுபோன்று சுருக்கமாகவே எழுதியனுப்ப வேண்டுகிறோம். ஆசிரியர்]

எழுத்தாளர் திருந்துவாரா?

P. சரோஜா.

"என்ன கமலா, சினிமா சினிமா என்றாயே—இன்றுதானே எனக்கு அவகாசம்—சீக்கிரம் புறப்படு. நம்மைப் போன்ற பாட்டாளி மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமைஒன்றுதானே ஆனந்த நாள்" என்றான் வித்யாதரன்.

"சரி இருங்கள், ஒரு நொடியில் டிரஸ் செய்துகொண்டு வருகிறேன்"என்றாள் அவன் மனைவி கமலா.

"ஒரு நொடியா? ஒருநாளா? கிடைத்த அவகாசத்தையும் நீ டிரஸ் செய்வதில் செலவழித்துவிட்டு படம் ஆரம்பித்த பிறகு போவதில் பிரயோஜனமில்லை. இந்தப் பத்திரிகையில் போட்டிருப்பதைப்போல, எனக்கும் ஐந்து பெரிய நாவல்களைக் கொடுத்துவிட்டுப் போ. நானும் படித்து முடிப்பேன், உன் அலங்காரமும் முடியும்"

"சரிதான், எந்த மூளைகெட்ட எழுத்தாளனோ எழுத, அதைப் புத்திகெட்டு ஒருவன் பிரசுரிக்க ...."

"பைத்தியக்காரனை நான் படித்துவிட்டுப் பிதற்றுகிறேன் என்று கூறுவாய்போலிருக்கிறதே" என்று இடைமறித்தான்.

"கட்டாயம் அப்படித்தான் கூறுகின்றேன். எந்த எழுத்தாளரை எடுத்தாலும் பெண்களின் அலங்காரத்தால்தான் குடிமுழுகிப் போய்விட்டதாகக் கற்பனை. நன்றாகச் சென்றால் ஐந்து நிமிடத்திற்கும்மேலாக எந்தப்பெண் தான் டிரஸ் செய்துகொள்ளப் போகிறாள். டிரஸ் செய்துகொண்டு வருவதற்குள் மகாபாரதம் படித்துவிட்டதாக விகடத்துணுக்கு; தூங்கி எழுந்துவிட்டதாக ஒரு தூங்குமூஞ்சிக் கட்டுரை. இப்படிப் பெண்களை

அவமானப்படுத்தும் விதமாக கதை எழுதுவோரையும், அதை பிரசுரிப்போரையும் கடுமையாகத் தண்டிக்கவேண்டும். அல்லது இனிமேல் பெண்களே வழக்குத் தொடர ஆரம்பித்துவிடுவோம்.

பெண்கள் நாகரீக வளர்ச்சியைப்பற்றி எத்தனை கேலிக் கட்டுரைகள். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் பெண்கள் நாகரீகம் முற்றமுற்ற செலவுகுறைகிறது. எட்டு கெஜம் புடவை போய் ஐந்துகெஜமாயிற்று. 1½ கெஜ காலர் ஜாக்கெட்டும், கப் ஜாக்கெட்டும் போய் அரை கெஜ சோலியாகிவிட்டது. பொன் நகைகளில் பணத்தைக் கொட்டுவதை விடுத்து போலி முத்து மாலையில் திருப்திப்பட ஆரம்பித்துவிட்டனர். ஆனல் ஆண்கள் நாகரீகம் வளரவளர செலவல்லவா அதிகமாகிவிட்டது. நாலு முழ வேட்டி போய் எட்டுமுழமாகிவிட்டது. அரை கெஜம் துணியை அதிகமாக செலவழித்து, புல்கை ஷர்ட் தைத்து, அதை வீணே முழங்கையில் மடித்து வைத்துக்கொள்வதில் என்ன ஆவலோ! இவற்றை எந்தஎழுத்தாளினியாவது இடித்துக் காட்டியிருக்கிருளா? பவுடரும் ஸ்னேவும் போடும் வழக்கத்தை நீங்களும் ஸ்வீகரித்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டீர்கள்! ஏன் வீணுக பெண் வர்க்கத்தை இப்படி தூஷிக்க வேண்டும்? நானும் உங்கள் நாகரீக வளர்ச்சியைப்பற்றிக் கட்டுரை எழுதி பத்திரிகைக்கு அனுப்புகிறேன் பாருங்கள்" என்று ஒரு குட்டிப் பிரசங்கம்விட்டாள்.

"எழுதி அனுப்பு. ஆனல் எவனும் பிரசுரிக்கமாட்டான்"

"அது முன்பு. இப்பொழுது சீர்திருத்த இதழ் மகிழ்ச்சியில் பெண்களுக்கென்றே ஒரு பகுதி இருக்கிறது. பெண்களின் குறைபாடுகளும், இழிவுபடுத்துவோருக்குப் புத்திமதியும் அடுக்கடுக்காக வரும் அதில்"

"சரிசரி, இப்பொழுதுசினிமாவிற்கு நேரமாகிவிட்டது!"

"ஓ! நான் ரெடி! பேச்சுக்குப் பேச்சு; அதேநேரம் டிரஸ்ஸும் செய்தாகிவிட்டது. எங்கே நீங்கள் ஐந்து பெரிய நாவலையும் முடித்துவிட்டீர்களா?"

★

ரசிக நாயகன்

[மீ. சு. இளமுருகு-பொற்செல்வி]

சத்தியமூர்த்தி பள்ளியில்படிக்கும்போதே கலையார்வம் கொண்டவன். பள்ளியின் ஆண்டுவிழாவில் நாடகம் நடைபெறும் அல்லவா, அப்படிப்பட்ட நாடகம் நடைபெற முக்கியமானவனாக இருப்பான் சத்தியமூர்த்தி. மற்றப்படியுள்ள ஓட்டப் பந்தயம், பந்து விளையாட்டு இவைகளில் அவன் கலந்துகொள்ளுவதில்லை. பத்தாவது வகுப்பு தாண்டுவதற்குள் நான்கு முழுநாடகங்களில் நடித்துவிட்டான்.

நடிப்பில் எவ்வளவுபைத்தியம் உண்டோ அவ்வளவு பைத்தியம் நாடகம் பார்ப்பதிலும் உண்டு. பள்ளிப் பருவத்தில் பையில் பணமேது? அதற்காக ஒரு தந்திரத்தைக்கையாண்டான் நாளை நாடகம் என்றால் இன்றே தன் தந்தையிடம் சென்று "அப்பா! கணக்கு வாத்தியார் நான்கு நோட்டுகள் வாங்கச் சொல்லுகிறார். விலை இரண்டேகால் ரூபாயாகிறது" என்று கூறிப் பணம் பெற்றுவிடுவான். அதோடு நின்றுவிடமாட்டான். பள்ளிக்கூடம் துவக்கும்போதே கணக்குக்கு மேலாக நான்கு நோட்டுகள் வாங்கிவைத்திருப்பான். எழுதப்படாத அந்தப் புதுநோட்டுகளை அப்பாவிடம் காண்பிப்பான் பெற்றுக்கொண்ட பணத்துக்கு வாங்கியதுபோல. அதைக்கண்ட அவரும், அடடா! நமதுபையன் எவ்வளவுஒழுங்கானவன் என்று உள்ளம்மகிழ்ந்துவிடுவார். அவன் செய்கிற திருட்டு முறையை அறியாது பாராட்டும்படி அவன் நடந்துகொள்ளுவது கலையார்வத்தால்—கலையின் ரசிகநாயகனாக மாறிவிட்டதால்தானே தவிர—தனித்த முறையில் அவன் நல்லவன். ஒருதடவை அப்பாவிடம்; மற்றொரு தடவை அம்மாவிடம் இப்படியாக சமயசந்தர்ப்பத்தை அறிந்து பணம்பெறும் முறையைக் கையாண்டுவந்தான்அவன்.

நாடகம்—சலனப் படமாக மாறியது. நமது ரசிக சத்தியமூர்த்தியால் பார்க்காதிருக்கமுடியுமா? பார்த்தான்—பார்த்துக்கொண்டேயிருந்தான். அதற்கான செலவுகளை எப்படியெப்படிநிர்வகித்தான் என்பதையெல்லாம் எழுதுவதென்றால் அதுவே பெரிய நாவலாகிவிடும். பக்தி மிகுதியாக ஆக என்ன வளரும்? குதிரைவாங்கிவரும்படி அரசன் கொடுத்த பணத்தை வாதவூரார் கோயில் கட்டவில்லையா? அவர் கடவுள்பக்தியால் அப்படிச்செய்

தார். நமது சத்தியமூர்த்தி கலைப் பக்தியால் இப்படி நடக்கிறார்.

சலனப் படம்—பேசும் படமாக வளர்ந்தது விஞ்ஞானிகளது விடாப் பிடியான முயற்சியால். பேசும்பட யுகம் துவக்கமாகியதும் படத்தைப்பற்றிய விமர்சனங்கள் செய்வதற்காக புதிய புதிய பத்திரிகைகள் வெளிவந்தது. படம் பார்த்த ரசிகர்கள் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பினால் வெளியிட்டனர். அத்தகைய ரசிகர் கூட்டத்துக்கு சத்தியமூர்த்தி தலைவனானான். புதுப்படம் எங்கு நடக்கிறதோ அங்கேயிருப்பான் இவன். கடவுள் பக்தர்கள் என்று கூறிக் கொள்ளுபவர்கள், பங்குனிமாத உத்திரமா பழனி—வைகாசி விசாகமா திருச்செந்தூர்—சித்திரை பௌர்ணமியா மதுரை என்று படையெடுத்து—பறி கொடுத்துத் திரும்புவார்களே அதைப்போல்தான் அவனும் புதிய படம் எந்த ஊரில் அந்த வட்டாரத்துக்குள் திரையிடப் பட்டாலும் அங்கே இருப்பான். படம் பார்த்து முடிந்ததும் கதையின் தரம்—பாட்டின் நிலை—நடிப்பின் நயம்—நடிகர்களின் நளினம் இவைபற்றிய விமர்சனத்தை எழுதி அனுப்பிவிடுவான். பத்திரிகைகளில் அச்சாகி விடும் அந்தஎழுத்துக்கள். நடிக நடிகையர் வட்டாரத்தில் ஓரளவு இவன் பெயர் பிரபலமாகியிருந்தது என்றால்கூட மிகையல்ல. பத்திரிகைகளில் சத்தியமூர்த்தி என்ற பெயருடன் எழுதமாட்டான். "சந்திரன்" என்ற புனை பெயரால்தான் எழுதுவான், வீட்டாரும், பள்ளி ஆசிரியரும் திட்டாது இருக்கவேண்டுமென்ற எண்ணத்தால்.

'இன்ப மாளிகை' என்ற ஒரு படத்தைப் பார்த்ததின்பின் விமர்சனம் எழுதினான் இவன். "படம் பிரயோசனமில்லாதது—கதையோ கலைக்கு உதவாதது—பாட்டுகளோ படுபாடாவதியானது—மொத்தத்தில்உருப்படாத ஒன்றுமில்லாத படம்தான் என்றாலும் ஒரேயொரு நல்ல அம்சமும் இருக்கிறது. அதுதான் நடிகை கலாவதி! அவருடைய நளின நயனம் நம்முடன் பேசுகிறது. நடிப்பு உயிர்த்துடிப்புள்ளது. இந்த நடிகையைத் தமிழ்ப் படஉரிமையாளர்கள் ரசிகர்களது கலை விருந்துக்குக் கட்டாயமாக அடிக்கடி நடிக்கச்செய்வது அவசியமானது. கலாவதியாரின் உன்னத நடிப்புக்காகவேண்டி 'இன்ப மாளிகை' ஒருமுறை பார்க்கத் தகுந்த படம்" என்று குறிப்பிட்டிருந்தான்.

புதிய முகமான நடிகை கலாவதிக்கு இந்தரசிகரின் வர்ணனை—புகழ்ச்சி இன்பந் தந்தது வியப்பல்ல. ரசிகரது ரசிகத் தன்மையைப் பாராட்டி—நன்றி கூறி ஒரு கடிதம் எழுதிவிட்டாள். சத்தியமூர்த்தி அந்தக் கடிதத்தைக்கண்டதும் அடைந்த

மகிழ்ச்சி கூறமுடியாதது. எத்தனை ஆயிரம் முறைகள் படித்தானே அதுவும் அவனுக்குத்தான் தெரியும்! இதுவரை நிகழாத புதுமையல்லவா அவனைப் பொருத்தவரையில் நிகழ்ந்துவிட்டது. அதிலும் கடிதம் எழுதியது—பெண்! அவன் மனது என்னென்னமோ கோட்டைகள் கட்டின. கலா உலகில் தான் ஒப்பற்ற இடம் பெறப்போவதாகவும், அதன் அறிகுறியே கடிதமென்றும், கலை அருள் புரியப் போவது கலாவதிதான் என்றும் முடிவு செய்துவிட்டான்.

அந்த முடிவு அவனை வெறிகொள்ளச் செய்தது. அவன் தெய்வபக்தன். பெரியபுராணம் படித்தவன். அந்தப் புராண நாயன்மார்களைப்போலாக வேண்டும் என்ற ஆசையை சாதியும்—சமூகமும் ஊட்டத் தவறுவதில்லையே! மேலும் அந்தக் காரணத்தாலோ என்னவோ இயற்கையாகவே பொருள்பெற—நாடகம்—சினிமா பார்க்க மாணிக்கவாசகர் மார்க்கத்தைக் கைக்கொண்டிருந்தானே! நரியைப் பரியாக்கவில்லை—ஆனால் பழைய நோட்டுகளைப் புதுநோட்டுகளாக—அதுவும் ஒரே கோட்டைப் பலமுறை அவதாரமும்எடுக்கச் செய்துவந்தான். கடிதங் கண்டதும் மற்றொரு நாயனாரான சாக்கிய நாயனார் நினைவு வந்து அவராக மாறிவிட முடிவு செய்துவிட்டான். சாக்கியநாயனார் சமணர். நாள்தோறும்; தவறாது மதியம் சாப்பாட்டிற்குமுன் சிவலிங்கம்மீது ஒரு கல்லெறிவது வழக்கம். ஒருநாள் மறந்துபோய்ச் சாப்பிட உட்கார்ந்துவிட்டார். உணவை உருட்டி வாய்வரை கொண்டுபோனதும்தனதுநோன்பான கல்லெறிவைபவம் இன்று செய்யப்படவில்லை என்பது நினைவு வரவே அந்தச் சோற்றுக் கையுடனேயே சென்று ஒரு கல்லாலடிக்கிறார் சிவலிங்கத்தை. உடன் கடவுள் காட்சியளித்து அவரது அந்தப் பக்திக்காக தன்னுடன் ஐக்கியப்படுத்திக்கொள்ளுகிறார். கல்லடி தாங்கமுடியாததால் கடவுள் கருணைசெய்தாரா என்ற ஆராய்ச்சியிலிறங்கினால் நமது சத்தியமூர்த்தியை மறந்துவிடநேருமே அதனால், ஆராய்ச்சியை விட்டுவிட்டு இவன் செயலைத் தொடரலாம். சாக்கிய நாயனாரைப்போல இவனும் பதில் வந்தாலும் வராவிட்டாலும் நாள் தவறாது கடிதத்தை நடிகை கலாவதிக்கு அனுப்பிவரலானான். மாதங்கள் ஓடினவேயொழிய பதில்மட்டும் இவனுக்குக்கிடைக்கவில்லை. அவனும்சளைக்கவில்லை.

இந்தக்கலையன்பு இருக்கிறதே அது மிகமிகப் பொல்லாதது. பாவம்! சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்ததைப்போல ரசிகனுக்கு ஒரு கடிதத்தை எழுதி அவன்மனதைக் கலக்கிவிட்டாள் கலாவதி. தபால்வழி கடிதத்தால் பயனில்லை. இனி சென்னைக்கே

சென்று நேரிலேயே தனது ரசிகத் தன்மையை, கலையார்வத்தை அவளிடம் காட்டிவிட வேண்டுமென்று முடிவு செய்தான்.

"நானைப் போகாமலிருப்பேனே" என்ற நந்தனார் நிலையை அடைந்தான். எப்போதுபார்த்தாலும் "போவேன் சென்னை—காண்பேன் கலாதேவியை—அடைவேன் கலையுலகத் தலைமையை" என்றெல்லாம் பிதற்றத் துவக்கினான். ஆர்வம் மட்டும் இருந்து என்னபயன்? பணம்வேண்டுமே? அதற்கானவற்றைப்பற்றி சிந்திக்கலானான். ஒருநாள் வீட்டின் மாடத்திலே மறதியாக அவனுடைய தந்தை இருபது ரூபாய்களை வைத்துவிட்டார். கண்டான் சத்தியமூர்த்தி. கலாதேவியே செய்தகருணை என்று கருதினான். பேசாதுஎடுத்துக்கொண்டு சென்னையை நோக்கிப் பயணமானான். ஊரைவிட்டு அதிகமாக எங்கும் சென்றவனில்லை. அதிலும் சென்னைபோன்ற பெரிய நகரத்தில் முன்பின்தெரியாதஇவன் என்ன செய்ய முடியும்? திக்குத் தெரியாத காட்டில் திகைப்பவனைப் போலானான்! ஊரின் சுவடையே அறிய முடியாதவனை சத்தியமூர்த்தியால் நடிகைகலாவதியின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியுமா என்ன?

எதிரில் வந்தவர்களையெல்லாம் கேட்டான். பதில்கிடைத்ததா? இல்லை. கேலியும் கிண்டலுமே கிடைத்தன. அவன் மனம் சோர்ந்தான். இருபது ரூபாய் அவன் வந்து சேர்வதற்கும், இரண்டொருநாள் செலவுக்குமே சரியாகிவிட்டது. கையில்காலணு கூட இல்லை. எப்படி வாழ முடியும்? அதிலும் அவன் உள்ளத்தை உறுத்தியது எது தெரியுமா? நடிகை கலாவதிக்குக் கடிதம் எழுத முடியவில்லையே என்ற கவலைதான். தன்னுடைய விடாப்பிடியான கொள்கையைக் கைவிடுவதா? வருந்தினான்—வருந்தினான்—அப்படி வருந்தினான்.

சென்னையில் இவனைப் பார்ப்பவர் எவரும் அதோ "ரசிக நாயனார்" என்று கூறுமளவுக்கு தன்னை மறந்தான்—ஆம்! பைத்தியமானான்! அவன் படித்திருந்த புராணக்கதை நாயனார்கள் அவன் உள்ளத்தைப் பாழ்படுத்தினர்—கலையார்வம்பைத்தியமாக்கிற்று. நாட்டிலே அவன் பலருடைய பரிகாசத்துக்குரிய ரசிக நாயனாரானான்!

பெரிய புராண நாயனார்களைப் போல சத்தியமூர்த்திகளுடைய நாயனார்பட்டியல் வளரக்கூடாது—வளரும்படியான சூழ்நிலை கலைஞர்களுண்டாக்கக்கூடாது என்பது என் எண்ணம்! போதும்! ரசிக நாயனார்! ரசிகர்கள் வேண்டும். ஆனால் நாயனார்கள் வேண்டாம்.

★

கார்டு கட்டுரைப் போட்டி 7 முடிவு

ஜாதி ஒழிப்பிற்கு எனது யோசனை

காலத்திற்கு ஏற்ற கேள்வி, கருத்துக்கு வேலை கொடுக்கும் பிரச்சனை, கவனிக்க வேண்டிய விஷயம். பகுத்தறிவற்ற பாரதத்தில் பாலகன் உள்ளத்திலிருந்தே இந்த ஜாதிப் பாகுபாடு பதிய வைக்கப்படுகிறது. பள்ளியில் சேர்க்கப்படும்பொழுதே அவனுக்குக்கொடுக்கப்படும் சீட்டில் ஜாதிப்பெயர் குறிக்கப்படுகிறது. இளம்உள்ளத்தில் விதைக்கப்பட்ட அவ்வித்து வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழுத்துவிடுகின்றது. எனவே எந்த அரசியல் சம்பந்தப்பட்ட ரிஜிஸ்டர்களானாலும் தஸ்தாவேஜுகளானாலும் அவைகளில் ஜாதிப் பெயர் இருக்கக்கூடாது என்று சட்டம் இயற்றவேண்டும். எந்தக்கணக்கு வழக்குகளிலும் கையெழுத்திடும் பொழுது ஜாதிப் பெயரை பெயரோடு சேர்த்து எழுதக்கூடாது. ஜாதியின்பெயரால் ஏற்பட்டுள்ள சங்கங்கள் கலைக்கப்படவேண்டும். எந்த ஹோட்டலாயிருந்தாலும், பள்ளியாயிருந்தாலும் ஜாதிப் பெயர்களால் நடத்தக் கூடாது. மேற்கண்டவைகளெல்லாம் சட்டமாக்கப்பட்டு மீறி நடப்போருக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக கலப்புமணத்திற்கு பரிபூரண ஆதரவு இருக்கவேண்டும். கலப்பு மணம் செய்து கொள்வோருக்கு வேலை விஷயங்களிலும், மற்றக்காரியங்களிலும் சர்க்கார் விசேஷ சலுகைகள் அளிக்கவேண்டும். இதன் மூலம் கலப்பு மணம் பெருகி ஜாதிப் பாகுபாடு குறைய ஏதுவாகும். முக்கிய நகரங்களிலெல்லாம் ஜாதிஒழிப்புச் சங்கங்களை தோற்றுவித்து ஜாதி ஒழிப்புப் பிரச்சாரம் நடத்தவேண்டும். பல கலப்புமணங்களை நடத்தி மக்கள் மனத்திலுள்ள அஞ்ஞான இருளை அகற்றவேண்டும். மணப் பத்திரிகைகளில் ஜாதிப்பெயர் மறைய வேண்டும். கல்வி அறிவைக் கொண்டு மணமக்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

சரோஜாபாண்டியன், விருதை.

(ரூ. 1 பரிசு பெற்றவர்)

* * * *

பரமஏழையாகிய நான் பணக்காரப் பெண்ணை மணந்தேன் என்று கூறுவதைவிட, மேல் குலத்தவனாகிய நான் கீழ்குலப் பாவையை மணந்தேன் எனக் கூறுவதில்பெருமைப்படல்வேண்டும். வாய்ப்பேச்சு, மேடைப் பேச்சு இல்லாமல் செயல் வீரர்களாக திகழல்வேண்டும். "இனி

கலப்புமணம்தான் செய்துகொள்ளல் வேண்டும்'' என்று ஆளவந்தார்கள் திட்டவட்டமாகச் சட்டம் செய்தல் வேண்டும். சாதியைக் குறிப்பிட்டு அடையாளம் கொண்ட பொதுவிடங்களில் உள்ள போர்டுகள் அனைத்தும் கண்காட்சியில் வைக்கப்படல் வேண்டும். நாய்க்குவால்போன்று மனிதனின் பெயருக்குப் பின்னால் சாதியைக் குறிப்பிட்டால் தகுந்த தண்டனை தரப்படல் வேண்டும். வருங்காலத்தில் திராவிடர்கள், கிருஸ்தவர்கள், முகமதியர்கள், ஆரியர்கள் என்போரெல்லாம் சம்பந்திகளாக, சாதி வெறியை ஒழித்த வீரர்களாக மாறவேண்டும். அதுதான் ஜாதி ஒழிப்பிற்கு வழி.

P.M. சுப்பிரமணியன், குளித்தலை.

* * * *

மகிழ்ச்சி கடந்த ஆண்டுகளாக இந்த இயக்கத்திற்கு மிகவும் கடமை செய்துள்ளது. ஆம்! கதை, கட்டுரை, கவிதை எதிலும் ஜாதிப்பெயர் குறிப்பிடாதது தான். இதேபோல் மற்றப் பத்திரிகைகளும் இந்த வழியை கடைப்பிடிக்கவேண்டும். மற்றும் திரைப் படங்களிலும் ஜாதிப் பெயர் அறவே ஒழியவேண்டும். நீதிமன்றம், அதிகாரி எல்லோரும் மகிழ்ச்சிவழி ஜாதிப் பெயர் எழுதுவது நீக்கினல் ஜாதி தானாகவே ஒழியும்......

K. ராமசாமி, சித்தாலம்புத்தூர்.

* * * *

.........சாதி மத வேற்றுமை பாராட்டாது மக்கள் வாழ ஏற்ற நல்ல சட்டங்களை (கடுமையாக) ஏற்படுத்தவேண்டும். பெயருக்குப்பின் சாதியைத் தெரிவிக்கும் வால்களைப் போடக்கூடாது என்று சட்டம் செய்தல் வேண்டும். சாதி வேற்றுமையைக் கிளப்பும் பிரச்சாரங்கள், நூல்கள், பத்திரிகைகள் முதலியன தடைப்படுத்தப்படவேண்டும். கலப்புமணத்தின் அவசியத்தை வலியுறுத்த வேண்டும் மக்களுக்கு. இன்றைய மாணவர்களும் செயலளவில் கலப்புமணம் புரிந்து ஏனையோருக்கு வழிகாட்டவேண்டும்.

தமிழ்ச்சுடர், இடையகோட்டை.

* * * *

.........நாட்டில் நடமாடும் ஆயிரமாயிரம் ஏடுகளும் ஒருமுகமாக குறைந்தது பத்து வருடத்திற்காவது ஜாதி ஒழிப்புக் குறித்து இடைவிடாது கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றைத் தீட்டவேண்டும். "ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் செய்து கொண்டவனை, ஏளனப் பார்வை பார்த்தால் ஆறுமாதம், கடிந்தால் ஒரு வருடம், துன்புறுத்தினல் இரண்டாண்டு, வேலைதர மறுத்தால் வீடு ஜப்தி'' என்று சற்றுக் கடுமையாக—நாடு திருந்தும்வரை—சட்டத்தை நிலைநாட்டுவோமானல் நிச்சயம் ஜாதி ஒழிந்துவிடும்......

அ. கிருஷ்ணன், குனியமுத்தூர்.

★

சிந்தனை சுழற்று

இளங்கீரன்
அய்யாபுரம்

சிந்தனை சுழற்றப்பா; சிந்தனை சுழற்று;
வெந்துயிர் போனாலும் சிந்தனை சுழற்றப்பா.

கதிருழக்கு நெல்கண்ட செந்நாடு
கைப்பிடிச் சோற்றுக்குக் கடன்பட்டு
கதியற்று, திக்கற்று, திகைப்புற்று
கஞ்சித் தொட்டிக்கு வாய்திறக்கும்
சதிவந்த தென்னென்று சணநேரம்
சிந்தனை சுழற்றப்பா சுழற்று.

செந்நெல், செங்கரும்பு செழித்து,
செம்பொன், செம்முத்துக் கொழித்து,
பந்தமும் பழம்பெரும் பாவலரும்,
பண்டைத் தமிழரின் பண்பாடும்,
செந்தமிழ்ச் செந்நூலும் மங்கியதேனென்று
சிந்தனை சுழற்றப்பா சுழற்று.

ஆய்ந்தறிந்த ஆற்றலார் போற்றியே
ஆக்கிய அருந்தமிழ் நற்பெயர்
மாய்ந்தொழிந்த மாயமும் மங்கா
மன்புகழ் மன்னரும் வேரொடு
சாய்ந்தழிந்த சமயம்வந்த தேனென்று
சிந்தனை சுழற்றப்பா சுழற்று.

இயற்கை ஒன்றே கடவுளும்
இருக்கும் அன்பேமத மென்றநாடு
மயக்கும் மூடமந்திர மாயமும்
முட்டாள் தெய்வங்களும் முளைத்த
செயற்கையால் சரிந்த தேனென்று
சிந்தனை சுழற்றப்பா சுழற்று.

பாரெல்லாம் தன்மணம் வீசிடும்
பால்மணக்கும் பைந்தமிழ் தானிருக்க
சாரில்லா தனித்தியங்கத் தகுதில்லா
சக்தியிலாமொழி தம்பட்ட மடிக்கும்
சீரெல்லாம் வந்ததே னென்றுநீ
சிந்தனை சுழற்றப்பா சுழற்று.

சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

[ஒருவர் சுருக்கமாக 2 கேள்விகளே கேட்கலாம்]

எஸ். நாராயணசாமி,
ஜமீன்ஊத்துக்குளி.

காதல் வாழ்க்கையில் களிப்புற்று இருக்கும் காதலன், காதலி கருவுண்டானவுடன் கை நழுவி விடுவதேன்?

'காரியத்தில் கண்வையடா தாண்டவக்கோனே' என்றபடி கலவியையே நாடிவந்த அவன் காரியம் கைகூடியவுடன் கம்பிநீட்டிவிடுகிறான். இன்பத்தைத்தான் அவன் நாடிவந்தவனே தவிர, துன்பத்திற்கும் துணை நிற்கவல்ல. காதல் கலியாணத்தில் முடியுமட்டும், காரிகையர் தங்கள் கரபில் கவனமாகஇருக்கவேண்டும் என்பதையே இது உணர்த்துகிறது.

வீ. கருணாநிதி, மதுரை.

பெரியார் ஈ. வெ. ரா. சினிமாவை ஒழிக்கக் கிளம்பியிருப்பதின் மர்மம் என்ன?

தன்னிடமிருந்து பிரிந்து சென்ற தி. மு. க. தோழர்கள் பலர் இத்துறையில் பிரபலமடைந்துவருகிறார்கள் என்ற குறுகிய எண்ணத்தால் அல்ல, இன்றுவரும் அநேக படங்கள் இளைஞர்களின் உள்ளத்தைப் பாழ்படுத்தும்வகையில் அமைந்துள்ள காரணத்தால்தான்இருக்கவேண்டும்.

V. காதர்மைதீன், சோழமாதேவி.

கற்பு அழிந்த பெண்ணை விபசாரி எனத் திட்டும் மக்கள், கற்பை அழித்த ஆடவனை சாதாரணமாக விட்டுவிடுவதேன்?

இயற்கை பெண்களின் விரோதியாக நின்று, அவள் கருவுற்றதைக் காட்டிக்கொடுத்துவிடுகிறது. அவமானச் சின்னம் அவளுக்குமட்டுமின்றி பெற்றோர், உற்றார்களையும் பாதிக்கிறது. மேலும் பெண் என்றால் ஆணிற்குக் கீழ்ப்பட்டவள் என்ற மனப்பான்மையே இருப்பதால் ஆடவர் செய்கை அவ்வளவாகப் பொருட்படுத்தப்படுவதில்லை.

ந. சண்முகசுந்தரம், தென்னமநாடு

காதலித்துக் கலியாணம் செய்வது நல்லதா? காதல் இன்றிக் கலியாணம் செய்வது நல்லதா?

பொறுப்புடனும், நேர்மையுடனும் நடந்துகொள்வதானால் எப்படிச் செய்தாலும் நல்லதே.

ஜாதியை ஒழிக்கக்கலப்புமணம் செய்தால் சாதி மறைந்துவிடுமா?

ஜாதி ஒழிப்பிற்குரிய முக்கிய விதிகளில் இதுவும் ஒன்றே.

சுப்பிரமணியன், குளித்தலை.

மற்ற அரசியல் கட்சிகளைவிட தி. மு. கழகம் மட்டும் சினிமா உலகத்திற்கு வக்காலத்து வாங்குவதின் கருத்தென்ன?

தி. மு. கழகம் அகில இந்தியக் கட்சி அல்ல. குறிப்பாக தமிழ் நாட்டு மக்களின் சமூகசீர்திருத்தங்களுக்கு சினிமா ஒரு நல்ல பிரச்சார

சர்தனமாகத் தோன்றுவதனாலும், கழகத்தைச் சேர்ந்த பலருக்கு சினிமாவில் நல்லவாய்ப்பு கிடைத்திருப்பதனாலும், அவர்கள் அக்கரைகாட்டுவதில் அதிசயமொன்றுமில்லை.

இரா. அ. அழகுமணி, தேவசேரி.

தி. மு. கழகத்தினர் ஆரம்பித்திருக்கும் பத்திரிகைகளைப் பார்த்து, பணம் சம்பாதிக்க நடத்துவதாகச் சிலர் கூறுகின்றனரே உண்மையா?

கொடுக்கும் காசிற்குத் தக்கபடி விஷயம், பக்கம் இல்லாத ஒருசில பத்திரிகைகளைக் கண்டு சிலர் இப்படிக் கூறுவதில் தப்பில்லை என்றாலும், 'தண்ணீர்த் தர்மம்' என்றபடி பணத்தை எதிர்பாராமல் 'பத்திரிகை தர்மம்'—இனமை பத்திரிகை—நடத்த யாரும் முன்வர இயலுமா?

அ. சோணை, மதுரை.

அழகிற்கு அலங்காரம் தேவையா?

அறிவுள்ளவரானாலும், ஒழுக்கம் தேவை. அதுபோல, அழகிற்கும் ஒருசிறிது அலங்காரம்தேவைதான்.

'விதி' ஒரு நோயா?

இல்லை, அதனினும் கொடிது.

தாளமில்லாத பாட்டு, தடாகமில்லாத ஊர், தயவில்லாத தையல் யாருக்குப் பிடிக்கும்?

முறையே, செவிடர், குருடர், தப்புச் செய்யாதவர்களுக்குப் பிடிக்கும்.

இலங்கையில் 'மகிழ்ச்சி'
சப் ஏஜன்ஸி எடுக்க விரும்புவோர்
கீழ்க்கண்ட "மகிழ்ச்சி"யின்
சோல் ஏஜண்டுக்கு எழுதுங்கள்:
த. தம்பித்துரை,
நியூஸ் ஏஜண்ட்,
நெ. 226, ஆஸ்பத்திரி ரோடு,
யாழ்ப்பாணம். (சிலோன்)

சொக்கலிங்கம், கொடுமுடி.

இயற்கை ஏன் ஏழையை மேலும் ஏழையாக்குகிறது?

இயற்கையல்ல, சூழ்நிலையும், சீர்கெட்ட சமூக அமைப்புமே இந்நிலையை உண்டாக்குகிறது.

கிரீன்லாம்ப், தென்காசி.

ஆந்திரப் பிரிவினையால், தி. மு. க. அரசியல் கொள்கை மாறுமா?

பொருத்திருந்து பார்ப்போம்.

என். இராமனுதன், மதுரை.

சந்திரனைக் கண்ட கடலும், காதலியைக் கண்ட காதலன் உள்ளமும் பூரிப்படைந்து பொங்குவதேன்?

இரும்பை ஈர்க்கும் குணம் காந்தத்திற்கு இருப்பதுபோல் சந்திரனின் குளிர்மைக்கும், காதலியின் மதி முகத்திற்கும் இருக்கலாம்.

புகழ்ச்சிக்கு அடிமையாவது யார்?

புல்லறிவாளர்.

குணம், மணம், நிறைந்தது
M.K. தியாகராஜ் பீடிகளே

தெரிந்த முத்துக்கள்

நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி, அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை. —பாரதியார்

கணவன் சம்பாதிக்க வேண்டும்; மனைவி சேமிக்க வேண்டும். —மார்ட்டின் லூதர்

உழவன் உள்ளத்திலே புயல் இருக்குமேயானால், வயலிலே வளம் காண முடியாது. —அண்ணா

மா. துரைசிங்கம், மதுரை.

* * * *

கோவில்களில் உள்ள மிரட்டல்களையும், நரகத்தின் பீதியையும் எடுத்துவிட்டால் அது அணைந்து போன ஒரு எரிமலைக்கொப்பாகும். —இங்கர்சால்

அழகு வழக்காடும்போது எல்லா பிரசங்கிகளும் ஊமையாகிவிடுகிறார்கள். —ஷேக்ஸ்பியர்

ஆர். செல்லத்துரை, மதுரை.

* * * *

சொல்பவர் எத்தகையவர், அது பற்றிக் கவலைப்படாதே. சொல்லப்பட்டபொருள் எத்தகையது: அதை மட்டுமே ஆராய்ந்துபார். —இங்கர்சால்

மூடநம்பிக்கையா—அது ஓர் அருவருக்கத்தக்க பொருளாயிற்றே—நசுக்கிப்போடு அதை—தயங்காதே! உம் சீக்கிரம்! —வால்டேர்

அடிமைத்தனம் குற்றம் அல்ல என்கிறீர்களா? அப்படியானால் உலகத்தில் குற்றம்என்பதாக எதுவுமே கிடையாது. —ஆப்ரகாம்லிங்கன்

K. S. மணி, ஆத்தூர்.

கோழையாக வாழ்வதைக்காட்டிலும், போராடிச்சாவதேமேலானது. தேசீய அகராதியில், கோழைத்தனமென்றசொல்லிற்கு இடமேஇல்லை. —காந்தியார்

ஆண்டவர்கள் அவர்களுடைய அருமைக் குழந்தைகளைக் காப்பாற்றி ஆதரிக்கவில்லை. பதிலாக மனிதர்கள் ஆண்டவர்களைக் காப்பாற்றி ஆதரித்துள்ளார்கள் —அறிஞர் இங்கர்சால்

இலட்சியத்திற்காக கஷ்டம், நஷ்டம் என்ற விலையைக் கொடுத்தே ஆகவேண்டும். —பெரியார் ஈ. வெ. ரா.

வெ. வள்ளிமணாளன், கரூர்.

* * * *

ஆட்சிபீடமேறியஅரசாங்கத்தின் வாயே பத்திரிகை. ஆளவந்தாரின் செய்கைகளே செய்திகள். அவர்கட்கு பிரசார பீரங்கியாக இருப்பதே 'பத்திரிகா தர்மம்' இதுவே இன்றைய நிலை. —தாம்ஸன்

மனிதமூளை ஒவ்வொன்றும், ஒவ்வொரு பெரிய வயல்—அதில் இயற்கை, எண்ணங்கள் என்ற விதைகளைத் தூவுகிறது. பயிர் வளரும் அழகு சூழ்நிலை சிந்தனையென்கின்ற மண்ணையும்எருவையும் பொருத்திருக்கிறது. —இங்கர்சால்

த. திருஞானசம்பந்தம், திருச்சேறை.

* * * *

மிகப் பழைய காலத்தில் கோயில் வழிபாடு கிடையாது. அந்நாளில்

இயற்கைவழிபாடொன்றே வழக்கத்திலிருந்தது. மீண்டும் அவ்வழிபாட்டைப் புதுப்பிக்கவேண்டுமென்பது எனது தணியா ஆசை.

—திரு. வி. க.

பலரிடம் பரந்த உலகினில் பழகினால் குற்றம் காணும் குறுகிய உணர்ச்சி போய்விடும். ஆண்களைவிடப் பெண்கள் மிகுதியாக குற்றம் கண்டு சண்டையிடக் காரணம், பரந்த உலகில் பலரிடம் பழகாத குறைதான்.

—டாக்டர் மு. வரதராசனர்

V. A. கருணைதாசன், மதுரை

* * * *

தன்னுணர்வுகொள்ளா மனிதன் இவ்வுலகில் வாழும் தகுதியே இல்லாதவன். —கவி இக்பால்

ஆண்டவனின் அருளுக்கு ஆகமங்களும், பிரார்த்தனைகளும் அவசியமே இல்லை. பஜனையும், விரதமும் வேண்டவே வேண்டாம்; தன்னடக்கம், பொதுநலத் தொண்டு, அன்பு, உண்மை ஆகியவையே போதும். —கதோபனிஷத்

அறிவின் வழிச் செல்பவனுக்கு வாழ்க்கை ஒரு ஹாஸ்ய நாடகம். உணர்ச்சிவழிச்செல்பவருக்கு அது ஒரு சோக நாடகம். —வால்போல்

A. P. பெருமாள்ராஜ், இராஜபாளையம்.

* * * *

பெண்ணின் குளிர்ந்த பார்வை முரடரையும் குழந்தை உள்ளங் கொண்டவராக ஆக்கிவிடும்.

—அறிஞர் அண்ணு

மணி, பொத்தனூர்.

* * * *

சமாதானமும், அமைதியுமே உலகிற்கு இன்பம் பயப்பன. சமாதானமே எனது விருப்பம்.

—நெபோலியன்

கடவுளை யாரும் கண்டதில்லை. ஆனால் நீ மற்றவர்களை அன்புடன் ஆதரித்தால் அங்கே நீ கடவுளைக் காணலாம், —ஏகநாதர்

V. செந்தில்நாயகம், உடுமலை.

* * * *

நான் முதலில் உலகத்தைச்சார்ந்தவன்; பிறகு இந்தியன்; அப்பால் தமிழன். உலகம் என் உடல், இந்தியா என் உள்ளம், தமிழ்நாடு என் உயிர். திரு. வி. க.

ஜெர்மனி அழிந்துவிட்டால் உலகத்தில் விஞ்ஞான அறிவு அழிந்துவிடும். பிரான்ஸ் அழிந்துவிட்டால் உலகத்தில் நாகரீகம்அழிந்துவிடும் கிரீஸ் அழிந்துவிட்டால் உலகத்தில் இலக்கியம் அழிந்துவிடும். ருஷியா அழிந்துவிட்டால்உலகத்தில்பொதுவுடமை அழிந்துவிடும் பிரிட்டிஷ் அழிந்துவிட்டால் உலகத்தில்பொய்யும் புரட்டும் அழிந்துவிடும்.

—பெர்னட்ஷா

எஸ் ஏ கைலநன், சேவூர்

* * *

கல்லூரிப் பேராசிரியருக்கும், ஆரம்பக கல்வி பயிலும் மாணவனுக்கும் உள்ள வித்தியாசம்தான் நம் நாட்டிற்கும் ரஷ்யாவிற்குமுள்ள வித்தியாசம்.

—என். எஸ். கிருஷ்ணன்

நூறு புரோகிதர்களால் நாட்டுக்குண்டாகும் நன்மையைவிட ஒரு ஆரம்ப ஆசிரியரால் உண்டாகும் நன்மை பலமடங்கு அதிகம்.

—தாமஸ்பெயின்

கா. அபிபுல்லா, பெரியகுளம்.

* * * *

சட்டப் புஸ்தகத்தைப் பார்த்துச் சந்தோஷமடைந்துகொண்டிராமல் இன்றைய உலக மாறுதலுக்கேற்றவாறு நிலைமையைச் சாதிருத்தியமைக்கப் பாடுபடுங்கள்.—நேருஜீ

A. மைதீன்பாஷா, ஆவூர்.

இது நிஜமா?

— வாகன் —

பலி

காற்று வாங்க கடற்கரையில் உட்காரும்போது கவனியுங்கள்! அலை கரையை மோதி திரும்புகிற இடத்திற்குக் காகங்கள் ஓடி வந்து ஒதுக்கப்பட்ட மீன்களை இரையாக்குகின்றன. காதல் ஏமாற்றத்தால் ஒதுங்கும்போது விபசாரம் பலிவாங்க முன்வந்து நிற்கும். சிலந்திவலையில் சிக்கிய பூச்சிகள் தப்புகின்றதில்லை. சீனி சீசாவினுள் வைக்கப்பட்டாலும் மூடப்பெறுவிட்டால் எறும்புகள் இழுத்துச்செல்லப்படுகிறது.

—ஒரு மைலாப்பூர் வாசி

சேர்க்கை

சூரிய வெளிச்சம் வெண்மையானது; அதை முப்பட்டைக் கண்ணாடியில் செலுத்தினால் வானவில் நிறங்கள் வெளித்தோன்றுகின்றன. அளவு குறைந்த அன்பின் சேர்க்கை காதல்—காமமாகவும், வெறியாகவும் மாறும்தன்மை கொண்டது.

—ஒரு பௌதீக சாஸ்திரி

பெருக்கம்

உரிமைக்காக பாடுபடுகிறவன் லட்சியவாதி. சமூக நலனுக்காக உழைக்கிறவன் சீர்திருத்தவாதி. யுத்த முன்னணியில் போரிடுகிறவன் வீரன், கட்டளையிடுகிறவன் தலைவன். நாட்டின் நலனுக்காக சிறைசெல்லுகிறவன் தியாகி. வழியை வகுத்துக் கொடுக்கிறவன் மகான். காதலின் பெருமை கலியாணம். பகுத்தறிவை எடுத்துக்காட்டுவது கற்பு. வாயில் காற்போன் பலசாலி. அறிவாளி பலஹீனமாயிருக்கலாம். அவனால் போரிடவோ தியாகம் செய்யவோ முடிகிறதில்லை. வீரர்களும், தியாகிகளும் இல்வாழ்க்கை நடத்த முடியாது. இவர்களால்தான் விபசாரம் பெருகுகிறது.

—ஒரு சிந்தனையாளன்

நம்பிக்கை

மேடு பள்ளத்தைச் சமதளப்படுத்த இரசமட்டம் உபயோகிக்கப்படுகிறது. பொறுமை என்ற காமம் தலையெடுக்காமலும் திருப்தி என்ற கற்பு நிலைநிற்கவும் மட்டம் தட்டுகிறதே கலியாணம்—கருவியைக் கண்டுபிடித்தவன் விஞ்ஞானி. ஞானி வாக்கு உபதேசமாகிவிடுகிறது.

—ஒரு உபதேசியார்

கடந்தகதை: ஜானகி, ராமன் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனர். ஆனால் ஜானகிக்கு வேறு இடத்திலும், ராமனுக்கும் சொர்ணத்திற்கும் கல்யாணம் நடந்து விடுகிறது. பின்.........

9

ராமன்

ஆணும் பெண்ணும் பேசி, கருத்துப் பரிமாறிய பின்னரே, கல்யாணம் செய்யவேண்டும் என்று காதல் மண ஆதரவாளர்கள் கதறுகிறார்கள்! பெண்ணோடு பேசாவிட்டாலும், மூக்கும்முழியும் எப்படி இருக்கிறது என்று தூரத்தில் இருந்தாவது பவுடர் முகத்தைப் பார்த்துக்கொள்வது நல்லது என்று சில ஜோக் பேர்வழிகள் சொல்லுகிறார்கள்.

ஆனால் நான்?

சொர்ணத்தைத் தாலி கட்டும் போதுதான் பார்த்தேன். அதற்கு முன் பார்க்கவேண்டும் என்ற அவசியம் என்ன வந்தது? காதலும் கவர்ச்சியும் ஜானகியிடத்தில் இருக்கும்போது சொர்ணம் எப்படி இருந்தால் என்ன? என் கைகள் சொர்ணத்திற்குத் தாலி கட்டின.

தாலி என்பது ஒரு தூண்டில்! தாலிக் கயிற்றின் கோரப்பிடியில் சொர்ணம் கழுத்தைக் கொடுத்தாள். சொர்ணம் எனக்குச் சொந்தக்காரியாக — மனைவியாக மாறிவிட்டாள். தூண்டில்காரனுக்குத்தானே மீன் சொந்தம்? அந்த மீனை தூண்டில்காரன் துடிதுடிக்க வைக்கலாம். துண்டு துண்டாக வெட்டி சாப்பிடலாம்! யார் என்ன கேட்கமுடியும்?

சாந்தி முகூர்த்தம் அன்றைக்கே வைத்தார்கள். எனக்குச் சாந்திஇருந்தால்தானே முகூர்த்தம் நடக்கும்? சொர்ணத்தோடு முதல் இரவு வைப்பதைவிட, ஜானகியோடு ஒரு கடைசி இரவு வைத்தால்கூடமகிழ்ந்திருப்பேன்

சொர்ணமும் நானும் அலங்கரிக்கப்பட்ட அந்த அறையிலே கொலுப் பொம்மைகளைப்போல உட்கார்ந்திருந்தோம். உணர்ச்சியில்லாத பொம்மையைக் கண்டு எவ்வளவு நேரந்தான் ரசிக்க முடியும்? நான் பொம்மையாக இருந்தேன். சொர்ணம் ஓரக் கண்ணால் என்னைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தாள். நான் அவளைத் தீண்டவே இல்லை. நான் தீண்டுவேன் என்று கண் விழித்து புன்னகை புரிந்தவண்ணம் இருந்தாள். ஆதவன்தான் அவளைத் தீண்டினான்.

ஒரு இரவு ஒழிந்தது. முதல் இரவு என்பது முடிந்தது. இப்படியே பல இரவுகள் ஓடின. இயற்கையிலேயே இரவும் தூக்கமும் பிரிக்க முடியாத நண்பர்கள். ஆனால் சொர்ணத்தைப் பொருத்தவரையில் இரவும் தூக்கமும் பகைவர்களாகவே இருந்தனர்.

படுக்கையிலே இருந்த என் மாமா, என்னை அழைத்து சொர்ணத்தை தவிக்கவிடாதே என்று சொல்லிவிட்டுச் செத்தார். என் மாமா என்னைத் தவிக்கவிட்டார். சொர்ணம் தானாக தவிக்கிறாள்! அதற்கு நான் என்ன செய்வது?

அன்று தலையணை நனைந்திருந்தது. "இதுஎன்ன சொர்ணம்?" என்றுகேட்டேன். "வியர்வை" என்றாள் சொர்ணம். உடல் கொட்டிய வியர்வையாக இருந்தால் தலையணை நனையவேண்டிய அவசியமே இல்லை. கண்கள் கக்கிய வியர்வைதான் என்பதை உணர்ந்தேன்.

சொர்ணம் அழுகிறாளா? தினமும் என்னால் அழுகிறாளா? இதை நினைக்கும்போது, எனக்கும் அழுகைவரும்போல் இருந்தது. வாழ்நாள் பூராவும் சொர்ணம் அழுதுகொண்டே இருப்பதா?

சொர்ணமும் பெண்தானே? அவளுக்கும் உள்ளம் உணர்ச்சி எல்லாம் உண்டல்லவா? நான் உதாசினம் செய்தால் அவளுக்குத் துணை யார்? கணவன்இருக்கும்போதே கைம்பெண்ணாக வாழ்வதா?

ஜானகி இல்லாமல் எனக்கு மகிழ்ச்சி இல்லை என்பது உண்மைதான். ஆனால் என்னால் சொர்ணத்தை மகிழ்விக்க முடியாதா? ஏன்—சொர்ணமாவது

எப்பொழுதும் ஒரேகுணமுள்ளது
M.K.T. போட்டோ பீடிகள்

சோபிதமாக வாழட்டுமே!

இந்தப் புத்தி வெகுநாட்களுக்குப்பின் உதயமானது. சொர்ணம்சோகத்தைவிட்டு, வளமான வாழ்க்கைப் பாதைக்கு வந்தாள். பிறருக்கு நன்மைசெய்யும் ஏணியைப் போல—தோணியைப்போல—இயந்திரத்தைப்போல, நான் சொர்ணத்திற்காக வாழ்ந்துவந்தேன்.

மீண்டும் வியாபார விஷயமாக கொழும்புக்குப் புறப்பட்டேன். ஆனால் நான் புறப்படுகிற அதே தினத்தில் ஜானகி வந்து இறங்கியதைப் பார்த்தேன். என் மனம் பழைய குழப்பத்தில் படாதபாடுபட்டது. அலைகடலைக் கிழித்துக்கொண்டு கப்பலும் புறப்பட்டது.

10

ஜானகி

நானும் என் வயோதிகக் கணவரும் நன்ருகத்தான் வாழ்ந்து வந்தோம். ராமரை மறந்துவிட்டு, கணவனேதெய்வம் என்ற கருத்தில் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தேன். ஆனல்...

என் பெட்டியிலே இருந்த, ராமர் கொடுத்த மோதிரத்தை ஒருநாள் என் கணவர் கண்டு கொண்டார். "ஏதடி இந்த மோதிரம்?" என்று வாலிபரைப் போல கர்ஜித்தார், என்வயதான கணவர்.

என் பாட்டிமேல் பாரத்தைப் போட்டேன். செத்தவர்கள்மீது பழியைப் போடுவது சுலபமில்லையா? என்பாட்டிதான் யாரோ பரிசாகத் தந்தார்கள் என்று சொல்லிக் கொடுத்தாள் என்று கூறினேன். என் கணவருக்கு நம்பிக்கை இல்லை.

வயதான கணவருக்கு சந்தேகம் இருப்பது இயற்கைதான். அதனல் என் சமாதானத்தை அவர் ஏற்கவில்லை. "உனக்கு ஏதோ கள்ளப் புருஷன் இருக்கிருன்" என்று ஆத்திரத்தில் சொன்னர்.

உங்களைப் போன்ற கணவர்களுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்களுக்கு, கள்ளப்புருஷன் இருந்தாலும் தவறில்லை என்று சொல்லியிருப்பேன்! ஆனலும் கணவரில்லையா? ஒரு பெண், அதிலும் அடக்க ஒடுக்கமாக, மான மரியாதையுடன் வாழவேண்டும் என்று நினைக்கிற என்போன்ற பெண், அப்படி பேசமுடியுமா?

"வீணகச் சந்தேகப்படாதீர்கள்! விலையுள்ள இந்த மோதிரம் பரிசாகக் கிடைத்ததுதான்" என்று சொன்னேன். அவர் நம்பினரோ நம்பவில்லையோ, பேசாமல் இருந்துவிட்டார்.

எம்.கே.தியாகராஜ் பீடிகளை
உபயோகியுங்கள்.

மறுதினமே அந்த மோதிரத்தை ராமருக்கு அனுப்பிவிடலாம் என்று நினைத்தேன். அதை என் கணவர் கண்டுகொண்டால்? அல்லது ராமர் மனைவி நான் அனுப்பினேன் என்று அறிந்தால்? இதனால் அனுப்புவதை நிறுத்தினேன். விலைக்கு விற்றுவிடலாமா என்றுகூட யோசித்தேன். ஆனால்......

பரிசு மோதிரத்தை விற்பதா என்றஎண்ணம் என்னைத்தடுத்து நிறுத்தியது. பழையபடி பெட்டிக்குள்ளேயே அதைப் போட்டு வைத்தேன்.

சந்தேகம் உள்ள வாழ்க்கையிலே சந்தோஷம் இருக்காது என்பது உண்மை. என் கணவர் என்னை சந்தேகப்படுவதோடு, வயோதிகராகவும இருந்தார். இந்த நிலையில் சந்தோஷம் என்வாழ்க்கையில் இருக்குமா? கணவன் இருந்தும் விதவைபோல நான் வாழ்ந்துவந்தேன். இப்படியே நாட்கள்போய்க்கொண்டிருந்தன

அன்று வந்த தபால்காரன், "ஜானகியம்மாள் யார்?" என்று என் கணவரிடம் கேட்டான். "ஏன்—என்மனைவிதான்" என்று என்கணவர் சொன்னார். "ஜானகியம்மாளுக்கு ஒரு லட்டர் இருக்குது" என்றான் தபால்காரன்.

லெட்டர் என்றதுமே திடுக்கிட்டேன். எனக்கு லெட்டர் வரவேண்டிய அவசியமே இல்லையே? ஒருவேளை ராமர் எழுதி இருப்பாரோ? அப்படி ராமர் எழுதி இருந்தால், என் கதி என்ன ஆகும்? எனக்கு ஓரே பயமாக இருந்தது.

"ஜானகியம்மாளுக்கு லெட்டரா?" என்று என் கணவர் ஆச்சரியத்தோடு தபால்காரனைக் கேட்க, "ஆமா! இந்தத் தபால், கொழும்பு, மெட்ராசு, இன்னும் பல ஊருக்குப் போயி, திரும்பி வந்திருக்கு" என்று சொல்லி தபால்காரன் கொடுத்தான்.

என் கணவர் கடிதத்தை வாங்கினார். என்நெஞ்சம் வெடித்து விடும்போல் இருந்தது. நான் ராமருக்கு கொழும்புக்கு எழுதிய கடிதந்தான் பல மாதங்கள் கழித்துத்திரும்பி வந்திருக்கிறது என்பதை அறிந்தேன்.

என் கணவர் கடிதத்தைப் பிரித்துப் படித்தார்.

ஆருயிர் காதல் ராமரே!

என்னை என் பாட்டி விவாகத்திற்கு விலைபேசுகிறாள். உங்கள் மாமாவும் உங்களுக்குப் பெண் பார்ப்பதாகத் தெரிகிறது. காதல் மோதிரம் கொடுத்தீர்கள். கைவிட்டுவிடாதீர்கள். உடனே வந்து என்னைக்காப்பாற்றுங்கள். இல்லையேல் சாவதைத்தவிர வேறு வழியில்லை.

தங்கள், ஜானகி.

படித்துமுடித்த என் கணவர் "காதலா? கள்ளி! மோதிரம் எப்படி வந்தது என்பது இப்

போதுதானடி தெரிந்தது! விபசாரி! நீ உயிரோடு இன்னும் இருக்கணுமா?" என்று சொல்லிக்கொண்டு, கட்டையை எடுத்து என்னை அடிக்கவந்தார்.

அடிபட்ட நான் கீழேவிழுந்தேன். மூர்ச்சையானேன். சிறிது நேரங்கழித்து விழித்துப் பார்த்தேன். என்கணவர் கீழே விழுந்துகிடந்தார். மூர்ச்சை தெளிய தண்ணீர் தெளித்தேன். அவர் விழிக்கவில்லை. மூச்சுப் போனபின் விழிக்க முடியுமா?

"ஐயோ" என்று அலறினேன் என் கணவர் செத்ததற்கு எல்லோரும் அழுதார்கள். நான் விதவையானேன் இனி கணவர் வீட்டிலே எனக்கு என்னவேலை?

பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தேன்.

(அடுத்த இதழில் முடியும்)

பூ மார்க் பீடி

எக்காலத்தும் மாருதல்வ

"கோபுர மார்க்"

தீப்பெட்டிகளே!



சைடு மருந்து
தண்ணீருக்குக் கலையாது.
50 டிக்கிரி பாரன் ஹீட்டில்
குச்சிகள் கழிவில்லாமல்
பொருத்தக்கூடியது.

★

The Southern India Match Co.,
SIVAKASI.
Tel:- "SIMCO"

இரவு

[வில்லோரம்]

இரவு வெகுநேரமாகியும் தூக்கம் வரவில்லை. ஆசிரியரின் பிடிவாதக்குணமே என் தூக்கத்திற்கு தடையாக இருந்தது. என்மூளை எல்லாம் உபயோகித்து, அநுபோகத்தை எல்லாம் திரட்டி 'வாழ்வது எப்படி' என்ற தலைப்புடன் பத்திரிக்கைக்கு அனுப்பிய கட்டுரையும் திரும்பிவிட்டது. நாட்டில்நடக்கும் அக்கிரமங்களை எல்லாம் கண்டித்து 'காலத்தின் கோலம்' என்ற தலைப்பின்கீழ் அனுப்பிய கட்டுரையையும் பத்திரிக்கையில் போட ஆசிரியர் மறந்துவிட்டார். விதவைகளின் பரிதாப நிலைமையை சித்தரித்து எழுதிய குட்டிக் கதையும் முட்டித் திரும்பிவிட்டது.

இதை எல்லாம் நினைக்கும் போது எப்படித் தூக்கம்வரும்? பழைய ஏடுகளைப் புரட்டினேன். பழைய ஏடுகளைப் புரட்டிப்புரட்டி அலுப்பு ஏற்பட்டது. தூக்கமும் வரவில்லை. பகலின் குறைபாடுகளை இரவில்தான் தெரிந்து கொள்ள முடியுமென யாரோ சொல்லியது என் ஞாபகத்திற்கு வந்தது. இரவு, இன்பத்தின் நண்பனா? அல்லது துன்பத்தின் துணைவனா என்ற கேள்வி என் மனதில் எழுந்தது. உலாவிவரலாமென இரவில் கிளம்பினேன்.

அப்பொழுது மணி இரண்டு அடித்தது. ஒரே பேய்இருட்டு. கிழக்கேயும் தெற்கேயும் அடிக்கடி பளிச் பளிச் என மின்னல் மின்னியது. அத்துடன் மழையின் உருமலும் இருந்தது. தெருவின் விளக்கொளிகள் உயிருக்குத் துடித்துக்கொண்டிருந்தன. காலம் தப்பாது குரல் கொடுத்து வந்த இராக் காவலர்களும் கண்ணயர்ந்துவிட்டனர். காவலர்கள் பொருப்பை ஆந்தைகளும் நாய்களும் எடுத்துக்கொண்டன போலும்.

மாடமாளிகைகளும் அழகிய பங்களாக்களும் நிறைந்த இந்நகரிலே குடியிருக்க வீடற்றவர்கள் நடைபாதையில் தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஓயா உழைப்பு ஓய்ந்து உறங்குகிறது. கணத்தோறும் புதியபுதிய ஆடைகளை வரிந்து வரிந்து மாட்டிக்கொள்ளும்மக்கள் உலாவும் இந்நகரிலே கொந்துபோன உடலை மறைத்துக்கொள்ள கந்தலாடைகூட இல்லாமல் கடவுளின் சிருஷ்டிகள் குளிரில் சுருண்டு கிடந்தன.

தூரத்தில் இருவர் அரசியல் வாதம் செய்துகொண்டிருந்தார்கள். சோற்றுக் கடை இலைத் தொட்டியில் வயிற்றுப் பசியுள்ள ஒரு மனிதன் ஒரு நாயுடன்

உரிமைப் போராட்டம் தொடுத்துக்கொண்டிருந்தான்.

எட்டாவது நம்பர் வீட்டு மாடியில் பாட்டுக்குரல்கேட்டது. பகலில் பதிவிரதைபோலக் காணப்பட்ட அப்பெண், பலர் முன்னிலையில் பாட்டுப் பாடினாள். அவள் கண்ணை வெட்டுவதும், கையை நீட்டுவதும், ஆடவரிடமிருந்து ரூபாயை பிடுங்குவதும் எல்லாம் விபசாரத்தின் முதல் படியாக இருந்தன.

பகலில் குடிப்பவர்களும் வியாபாரத்தின் பெயரால் திருடுபவர்களும் தங்கள் திறமையும் வாய்ப்பும்காரணமாக சீமான்களாகவே இருக்கிறார்கள். ஆனால் இரவில் குடிப்பவர்கள் திருடுபவர்கள் திறமையும் வாய்ப்பும் இல்லாத காரணத்தால் சிறையில் தள்ளப்படுகிறார்கள்.

கோடி வீட்டில் சூதாட்டம் நடந்துகொண்டிருந்தது. ஜன்னல் கதவுகள் மூடப்பட்டிருந்தாலும் இடை சந்துக்களிலிருந்து மின்சார விளக்கு வெளிச்சம் தெரியத்தான் செய்தது. சிறிது தூரத்திலிருந்து சாராயத்தின் நெடி குளிர்ந்த காற்றுடன் மிதந்துவந்தது. "மதுவிலக்குச் சட்டம் அமுல் நடப்பது பகல் காலத்தில் மட்டுமா? அல்லது இரவு காலத்திலுமா?" என்று எதிர்க்கட்சி அங்கத்தினர் சட்டசபையில் கேள்வி கேட்டதின் விபரம் அப்பொழுதுதான்எனக்குப் புரிந்தது.

இந்த அகாலத்தில் தெருவழியே தனியாகவரும் பெண் யார்? அவள் ஒரு அபாக்கியவதி. அவள் சிறுகுழந்தையாகஇருந்த பொழுதும், பள்ளியில் படித்த பொழுதும் இரவைப்பற்றிக் கவலைப்பட்டதே இல்லை. இரவின் இன்பமோ அல்லது இரவின்துன்பமோ அவளுக்கு அப்பொழுது தெரியாது. ஆனால் அவனை மணந்துகொண்டபின்பு தான் அவளுக்கு இரவின் இன்பம் தெரிந்தது. எல்லோரையும் போலவே முதல் இரவை அவளால் மறக்கமுடியாது. முதல் இரவில் அவர்கள் இருவருமே தூங்கவில்லை. 'குசுக்குசு' என விடியும்வரை பேசிக்கொண்டும் சிணுங்கிக்கொண்டுமிருந்தார்கள். அதுமுதல் அவள் இரவை மிகவும் விரும்பினாள். இரவுக்காக ஏங்கினாள். பகலை சபித்துசபித்துச் சங்கடப்படுவாள். இரவு வந்ததும் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துக்கொண்டு அலங்கார வேலைகள் நடக்கும். முகத்துக்கு பவுடர், கண்ணுக்கு மை, நெற்றியில் குங்குமம், தலையில் பூ... அவன் வரும்வரை அவள் அலங்கார வேலை நீடிக்கும். இரவு நெடுநேரம் வரை இருவரும் காதல்வெள்ளத்தில் புரண்டு கண்ணயர்வார்கள்.

காலமாறுதல் அவளையும் விடவில்லை. ஆறுமாதத்திற்குப் பின் அவன்போக்கில் மாறுதல் ஏற்பட்டது. அதற்குக் காரணம்

அவள் அல்ல. கெட்டநடத்தை யுள்ள சிலர் அவனுக்கு நண்பர்களானார்கள். அதனால் குடிக்கும் பழக்கமும் அவனுக்கு ஏற்பட்டது. தாம்பத்திய வாழ்க்கையில் சந்தோஷமில்லை. இரவு வீட்டிற்கு வந்தால் அவளை அடிப்பது அவன் கடமையாக நினைத்தான்போலும். முன்பு இன்பமாகஇருந்த இரவு இப்பொழுது துன்பமாக மாறிவிட்டது. இப்பொழுது அவள் இரவைவிரும்பவில்லை. அவள் விரும்பவில்லை என்பதற்காக இரவு வராமல் நின்றுவிடுமா?

வழக்கமாக இரவு 12மணிக்கு வீட்டிற்கு வரும் அவன் அன்று மணி 2 ஆகியும் வரவில்லை. குடிகாரன் எங்காவது போய் ஒழியட்டும் என்று அவள் எண்ணவில்லை. என்னஆபத்தோ என்று கலங்கினாள். நேரம் ஆக ஆக அவளால் வீட்டிலிருக்கவே முடியவில்லை. வீட்டை விட்டு வெளியேறினாள். ஒரு பெண் தனியாக இரவில் வெளிவர எவ்வளவுதைரியம்வேண்டும். அவள் தைரியம் உள்ளவளா? இல்லை, அவனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற ஏக்கம்; அவனைக் காண வேண்டுமென்ற ஆவல்; ஏக்கமும் ஆவலும் தைரியத்தைக் கொடுத்தது. அந்தத் தைரியத்தில்தான் வீட்டைவிட்டு வெளியேறியிருக்கிறாள். அவள்உத்தமி அவளையும் அவனையும் கடவுள் தான் பார்க்கவேண்டும்.

"கொக்கரக்கோ"என சேவல் கூவியது. கோவில் வாசலிலிருந்து யாரோ பூபாளராகத்தில் இனிமையாகப் பாடுகிறான். அப்பாட்டில்"கஷ்டங்களைமறக்க வேண்டும், கஷ்டப்படுவோரை மறந்துவிடக்கூடாது. அதற்கு அருள்புரிய வேண்டும்" என தெய்வத்தினிடம் பக்தன் கெஞ்சுகிறான்.

நான் எல்லாவற்றையும் மறந்துவிட ஒரு கப் காப்பிசாப்பிடப் போகிறேன்.

உங்கள் பதில் என்ன?

(1) 20 அல்லது 22 வயதான இளைஞனாக இருந்தாலும், 50 வயதுப் பெரியவர்களிடமிருந்தும் மரியாதையும், கௌரவமும் சம்பாதிக்க முடியும். எப்பொழுது?

(2) செங்குத்தாக ஒருகோடு பென்ஸிலால் இழுக்கப்பட்டுள்ளது அதை ரப்பரால் அழிக்காமல் சிறிதாக்குவது எப்படி?

(3) ஐந்து நெருப்புக்குச்சிகளை உபயோகித்து வரக்கூடிய மிகச் சிறிய எண் யாது?

(4) யார் என்னசொன்னாலும் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் பொறுமையுடன் இருப்பவர் யார்?

(5) யார் எது கேட்டாலும் எதிர்த்துப் பேசாது அடக்கமாக இருப்பவன் யார்?

7வது போட்டி பரிசுக் கட்டுரை

சினிமா

தி. கலைவாணி—இரும்பேடு

புரையோடிய சமுதாயத்தைத் திரைப்படத்தின்மூலமாக திருத்தும் புனிதவழிகாட்டியேசினிமா! பாமரர்களுக்குப் பகுத்தறிவை ஊட்டி, சீரழிந்த கொள்கையினரைச் சீர்திருத்தப் பாதைக்கு அழைத்துச்செல்லும் சீர்திருத்தவாதி சினிமா! அறியாமை என்னும் மண்மேட்டை அறிவு அலைகளால் அழிக்கும் அறிவுக்கடல் சினிமா! நாட்டிலே நடப்பதை படம்பிடித்து, அழகிய வசனங்களால் உருவகப்படுத்தி உலகத்தாருக்கு உரைக்கும் உண்மைவழியன் சினிமா!

கலைமகளைக் கடவுளாகக் கொண்டு வாழும் இக் கன்னித் தமிழ்நாடு கல்விக்காக ஒருவருக்குச் செலவழிப்பது 0—3—9. புதுமையில் பித்தம் கொண்ட பிரிட்டன் செலவழிப்பது 33-2-0. இது 1939ம் ஆண்டு எடுத்த கல்வியைப்பற்றிய புள்ளி விவரம். இதிலிருந்து அறியாமையால் அவதிப்படும் நாடு நம் தமிழ்நாடு என்று அறுதியிட்டு சொல்லலாம். அறியாமைசூழ்ந்த இருள் நாட்டில் அறிவொளி வீச சினிமா சிறந்த சாதனம் என்றுதான் சிந்தையுள்ளஎவரும் கூறத் துணிவர்.

தாயகத்தை தலைநிமிரச்செய்ய எழுத்தாளன், பேச்சாளன் அவசியம் வேண்டும். எழுத்தாளனுடைய எழுத்தோவியங்களை எல்லோரும்வாங்கி படிக்கஇயலாது. கல்வியில்லாமையினால் படிக்கவும் முடியாது. கல்வியிருப்பவன் படிக்க நினைத்தால் அந்நூலை வாங்கப் பணமும் கிடையாது. இக்காரணங்களினால் கற்றவரும் கல்லாதவரும் பேச்சாளன்உதவியால் நன்மை பெறலாம். நாட்டிற்கு சேவை செய்யலாம்.

ஆயிரம் பொதுக்கூட்டங்கள் போட்டு அறிவைப் பரப்புவதைவிட ஒரு நாடகத்தின் மூலம் நற்கொள்கையை உலகத்தின்நாற்புறமும் பரப்பிவிடலாம். இயற்றமிழும் இசைத்தமிழும் இணைந்தே நாடகத்தமிழ் என்று பெயர் பெறுகிறது. நாடு + அகம். நாட்டின் அகத்தை அறிவுத் திறமையால் மக்கள் மனங் கவரும்படிநடிப்பதே நல்லது. நாடகத்தைப்பற்றிய இலக்கணமே இதுதான் என்று இன்றைய

அறிஞர்குழாம் இயம்பும். இயம் பத்தான் வேண்டும். நாடகத்தின் வளர்ச்சி விஞ்ஞானத்தால் சினிமாவாக மாறியுள்ளது.

நெருப்பால் வீட்டைக் கொளுத்தலாம். நாவிற்கினிய பண்டமும் செய்யலாம். வெள்ளத்தால் பொருளை அழிக்கலாம். மின்சக்தி உண்டாக்கி உலகெங்கும் இரவில் ஒளியையும் பரவச் செய்யலாம். சிறுகத்தியால் ஒருவனைக்குத்தி சிந்தும் ரத்தத்தைக் கண்டு களிக்கலாம். சிங்காரச் சோலையில் பழுத்த மாங்கனியை அறுத்தும் தின்னலாம். சினிமாவால் காம உணர்ச்சியை எழுப்பலாம். அறிவுணர்ச்சியை உண்டாக்கி அறியாமையையும் அழிக்கலாம். இவையெல்லாம் அவரவர் உபயோகப்படுத்தும் திறமையைப் பொருத்தது.

சிலர் சிந்திக்காமலே சினிமா, நெருப்பு, வெள்ளம், சிறுகத்தி இவைகளை வேண்டாம் என ஒதுக்கக்கூடாது. அவைகளை நன்மை நல்கும் வழியில் பயன்படுத்துவதே அறிவுடையோர் செயல். சினிமா என்னும் சிங்காரச் சோலையில் அறிவு என்னும்பூநாகம்இருப்பதாகச் சொல்கின்றனர் சிலர். பூங்காவில் புதுமணத் தம்பதிகள் வரலாம். மனோகரியுடன் மணாளன் மந்தமாருதமணத்தை நுகரலாம். பூநாகமோ சோலைக்கு வராது. வந்தால் பூநாகத்தைக் கொல்ல வேண்டுமேதவிர பூஞ்சோலையை பூநாகத்திற்காக அழித்தல்கூடாது

சினிமா அவசியம் வேண்டும் என்று இத்தகைய தக்ககாரணங்களை அறிவுடையோர் அவனிக்கு முழக்கவேண்டும். அதற்குப்பின்னர் சினிமா நாட்டிற்கு வேண்டுமா? நன்மையா? தீமையா? என்ற வினாக்களை எவரும் விடமாட்டார்கள் சிந்தை கவரும் சினிமா சிறந்தோங்கும். ஒருசில படங்களில் பெண்மைக்கு களங்கம் உண்டாகும் கட்டம் காணப்படுகிறது. இப்படிப்பட்ட கட்டங்களை அரசியலார் கத்தரிக்க வேண்டும். கத்தரிக்காவிட்டால் அரசியலின் அறிவை (!) அது காட்டும்.

நாட்டிற்கு நன்மை அளிக்கக் கூடியசினிமாவேண்டும். உழைக்கும் உழவனின் உரிமைக்குரல், விம்முகின்றவிதவைகளின் வேதனைக் கண்ணீர், பாடுபடும் பாட்டாளியின் பாழடைந்த வாழ்வு, திரை மறைவில் நடைபெறும் தீயோர்களின் ஓங்க நாடகம், மாடிவீட்டு மனோகரியின் விபச்சார விநோதம், கடவுள் பெயரால் கயவர்கள் செய்யும் களியாட்டம், படியாத பாமரர்கள் படும்பாடு, உழைப்பவர்களின் உதிரத்தை உறிஞ்சும் உலுத்தர்களின் லீலைகள் இன்னோரன்ன நாட்டு நிலைகளைக் காட்டும் சினிமாவையே சீர்திருத்த உலகம் பார்க்க விழைகிறது. ★

திரைப்பட விமர்சனம்

★ மனிதன் ★

N. B. ஜெயச்சந்திரன் B. A.—விருதை

கொஞ்சகாலமாகத் தமிழ்நாட்டில் சினிமா படங்கள், புற்றிலிருந்து ஈசற்கூட்டம் வெளியேறுவதுபோல கணக்கில்லாமல் தோன்றிவருகின்றன. செய்தித்தாள்களைப் பிரிக்கும்போதெல்லாம் ஏதாவதொரு புதிய படத்தின் விளம்பரம் காணப்படுகின்றது. புற்றிலிருந்து வெளிக்கிளம்பும் ஈசல்களெல்லாம் வெகு உயரத்திற்குப் பறந்து சென்றுவிடுவதில்லை. வெகுசிலவே உயரக் கிளம்புகின்றன. அப்படியே பறந்து சென்றாலும் காக்கை, கழுகுக் கூட்டங்களின் எதிர்ப்பு வேறுகாத்திருக்கும். அதுபோல, வெளியேறும் எல்லாப் படங்களும் வெற்றிபெறுவதில்லை. சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை மேலே போர்வையாக மட்டும் கொண்டு வெளியேறும் படங்களின் உண்மை உருவம் எளிதில் தெரிந்துவிடுகின்றது. இயல்பாகவே கொள்கை வளமும், கலை மணமும் பொருந்திய சினிமாப் படங்கள் சிலவே தோன்றுகின்றன. அவைகளுக்கும் பொறுமைக் கும்பல்களிடமிருந்துவரும் இன்னல்கள் பல. அத்துன்பங்களையும் கடந்து சிலபடங்கள் நல்லபடி வெளியேறுகின்றன. அப்படிப்பட்ட நல்லபடங்களில் ஜுபிடர்—லாவண்யா கூட்டுத் தயாரிப்பான மனிதனும் ஒன்று.

கதை: ஏற்கனவே டி. கே. எஸ் சகோதரர்களால் மேடையில் நடிக்கப்பட்டு மக்களின் நன்மதிப்பைப்பெற்றது. திருச்சியில் புகழுடைய செல்வர் சாம்பசிவத்தின் மகளான சாவித்திரி தாயையிழந்தவள். அவளுக்கும் ராணுவ டாக்டர் சுகுமாரனுக்கும் திருமணம் நடைபெறுகின்றது. ஒருநாள் இன்பத்திற்குப்பின் மணமகன் போர் முனைக்குச் செல்லநேரிடுகிறது. கணவனின் நினைவாக ஆண்டுகளைக் கடத்துகின்றாள் சாவித்திரி. சாம்பசிவத்தின் இளையமனைவி ப்ரேமா தன் வாழ்நாள் வீணாவது கண்டு, தன் இன்ப வாழ்விற்கு வழி தேடி, பள்ளியில் தன்னுடன் படித்த ராஜன் எனும் ஓவியனை அழைத்துவந்து தன் வீட்டில் தங்கச் செய்கிறாள். ஆனால் ராஜன் அவளது அன்பை வெறுக்கிறான். இங்கிலையில் அவன் சாவித்திரியினழகில் உள்ளம் பறிகொடுத்துவிடுகின்றான். ஓர்

நாள் இடி, மின்னல்களுக்கிடையே ஏற்பட்ட இயற்கை நிகழ்ச்சி ஒவியனையும் சாவித்திரியையும் கூட்டிவைக்கிறது. இதன் பயனுகக் கருவுற்ற சாவித்திரி உயிரைவிட முயற்சிக்கையில் ராஜனின் தங்கை தடுத்துவிடுகிருள். இதையறிந்த ராஜன் தன்தவறை உணர்ந்து பைத்தியம்போல் அலைகின்ருன். போர் முடிந்த பின் வீட்டிற்கு விரைந்துவரும் சுகுமாரனின் டாக்ஸியில் ராஜன் அடிபடுகிருன். சுகுமார், சிகிச்சையின்போது ராஜனின் காலைத் துண்டித்து உயிரளிக்கிருர் ராஜன் தன் கதையை அவரிடம் கூறுகையில் சாவித்திரி சுகுமாரனின் மனைவிதானென்று வெளியாகின்றது. இதையறிந்த ஓவியன் உள்ளம் பொருது ஓடி, மாடியிலிருந்து விழுந்து இறக்கின்ருன் ஊருக்கு வந்த சுகுமாரிடம், சாவித்திரி பெற்றகுழந்தையையே கொன்றுவிட்டதாகப் பழி சுமத்துகிருள் ப்ரேமா. குழந்தையைக் கொன்றது ப்ரேமாதான் என்பது பின் வெளியாகிறது. தனது கணவனைக் கண்டதும் சாவித்திரி அதிர்ச்சியால் உயிர்துறக்கும்போது, டாக்டரிடம் ராஜனின்தங்கையை அளிக்கின்ருள்.

நடிப்பு: துவக்கத்திலிருந்து கதை மிகவும் விறுவிறுப்பாகச் செல்கின்றது. சலிப்புத் தட்டவில்லை. “குற்றத்தை மன்னிப்பவனே மனிதன்” என்றகொள்கை தான் கதையின் அடிப்படைக் கருத்து. இக்கொள்கையைக் கடைசிவரை கடைப்பிடிக்கிருர் டாக்டர் சுகுமாரனுக வரும் டி.கே. பகவதி. இவரது நடிப்பு ஆரம்ப கட்டங்களில் நாடக முறையிலேயே அமைந்திருக்கிறது. ஆனுல் போகப் போக நடிப்பு உச்சநிலையடைகிறது. இறுதிவரை அமைதியுடன் நடித்து நல்லபெயர் பெறுகிருர்.

ஒவியனுக வரும் டி.கே. சண்முகம் வழக்கம்போல் நன்ருக நடிக்கின்ருரென்ருலும்இப்படத்தில் நடிப்பின் சிகரத்தை எட்டிப் பிடிக்கின்ருர். ஓவியன் தனது குற்றத்தினை உணர்ந்து உருகும் கட்டங்களில்தான் இவரது நடிப்பு நமது கண்களில் நீரை வரவழைக்கின்றது. முடிவில் மாடியிலிருந்து விழுந்திறக்கும்போது இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே விழுந்தேவிடுகிறது.

சாவித்திரியாக நடிக்கும் கிருஷ்ணகுமாரி (அட்டைப்படத்தில் உள்ளவர்) நடிப்பு கச்சிதமாக இருக்கிறது. களை சொட்டும் முகவெட்டுள்ள இவர் வருங்காலத்தில் நல்ல புகழுடைய வழியிருக்கிறது. இறுதிவரை தனது பாகத்தைத் திறம்பட ஏற்று நடிக்கிருர். ஒவியனின் தங்கை சரஸாவாகத் தோன்றும் பண்டரிபாய் தனக்கு எந்தப் பாகம் கொடுத்தாலும் வெற்றியுடன் நடிக்கத்தெரியுமென்று இப்படத்

தில் நிரூபித்துவிடுகிறார். தனது அண்ணன் செய்த குற்றத்தை அவனிடமேஎடுத்துக்கூறி வாதாடும் காட்சியில், இவரது நடிப்பு 'கண்ணகியில்' கண்ணாம்பாளின் நடிப்பைநினைவூட்டுகிறது. கதையின் சிக்கலை அறுக்கும் முயற்சியில் இவருக்கு வாய்ப்பளிக்கப் பட்டிருக்கிறது. இளைய மனைவி ப்ரேமாவாக நடிக்கும் மாதுரி தேவி மற்றப் படங்களில்போல தேவையில்லாதஆர்ப்பாட்டங்கள் செய்யாமல் வேண்டிய அளவு துடுக்குடன் நடிப்பது கதையின் விறுவிறுப்பை அதிகரிக்கின்றது. சில கட்டங்களில், ஏளனப் புன்னகை புரிவதில் தனக்குநிகரில்லை என்பதுபோல நடிக்கிறார். கதையின் கருத்து வளர்ச்சி பெறுவதற்கு அடிப்படை இடும் பாகம் இவருடையதுதான். ஓவியனாகிய ராஜன், ப்ரேமாவால் வீட்டிற்கு அழைக்கப்பட்டிருக்காவிட்டால், சாவித்திரிதவறியிருக்கமாட்டாள் கதையும் வேறு திசையில் ஓட நேரிட்டிருக்கும்.

ப்ரண்ட் ராமசாமி ப்ரண்டாகவே நடிக்கிறார். நகைச்சுவைப் பகுதியில் நன்கு நடித்து இறுதியில் உணர்ச்சி பாகமாகவும் நடித்து புகழைத்தட்டிக்கொண்டு போகிறார். வில்லனாக நடிக்கும் எஸ். வி. நடராஜனின் நடிப்பில் கோளாறு இல்லையென்றாலும் முன்புபோல் சிறக்கவில்லை. படத்தின் மற்றைய நடிகர்களின் நடிப்பும் பரவாயில்லை.

பாட்டு: படத்தில்வரும் பாட்டுகள் இனிமையாகவிருக்கின்றன ஓவியன் பாடும் பாட்டு அவனது கலையுள்ளத்தினை நிறைபோட்டுக் காட்டுகின்றது. "பெண்ணே உலகின்கண்ணே" எனும் பாடல் நம்மை மயிர்க்கூச்செறியச்செய்கிறது.

ஒலிப்பதிவு,ஒளிப்பதிவு,செட்டிங்குகளெல்லாம் நல்ல முறையில் அமைந்துள்ளன. ஏற்கனவே நாடகக் கதையாகையால் படத்தயாரிப்பில் டைரக்ஷன் ராம்நாத்துக்கு அதிகத் தொல்லையிருந்திருக்காது. நாட்டியங்கள் குறைக்கப்பட்டிருப்பது வரவேற்புக்குரியது. ஆனால் அவற்றை இன்னும் கவர்ச்சியுடன் அமைத்திருக்கலாம்.

மனப்போர்: சில குறைகளும் தோன்றுகின்றன. "மன்னிப்பவனே மனிதன்' என்றகொள்கை நல்லதுதான் என்றாலும், இது ராணுவத்தில் ஏற்றுக்கொள்ளப் படாததாகும். நாட்டிலும்செய்த குற்றத்தையெல்லாம் மன்னிப்பவர்கள் மிகுந்துவிட்டால், அது குற்றங்கள் பெருகுவதற்கு நிச்சயம் வழிவகுக்கும்.

ஒழுக்கத்தில் தவறிவிட்டால் பெண் மாத்திரமல்ல ஆணும் குற்றமுள்ளவன்தான் என்னும் கொள்கை வரவேற்கப்படுகிறது. ஆனால் பெண்ணைப் பொருத்தவரையில் இங்கு கற்பிழந்தவள் முற்றிலும் மன்னிக்கப்படுகிறாள். குற்றம் எதிர்பாராத நிகழ்ச்சி

என்றாலும், உணர்ச்சிக்கு அடிமை யாகி கற்பிழந்த குற்றத்தில் அவ ளுக்கும் பெரும் பங்குண்டு. கதையின் கற்புக்கொள்கை தற் காலத்தில் பெண்களைத் தவறிய வழியில் செல்லத் துணிச்சலை யளிக்கக்கூடும்.

சிறப்பற்றவை: ஒருவரின் உள்ள நிலையைத் தெரிவிக்க, சந்நியாசியோ அல்லது பிச்சைக் காரனோ வந்து பாடிக்கொண்டு செல்லும் பழங்காலத்து நாடக முறை இன்னும் திரைப் படத் தில் நிலைத்திருப்பது எடுப்பாக இல்லை.

மின்னல், மழைக்காட்சி இயற் கையாக இல்லை. பின்னணிக் காட்சிகளுக்கு மிகுதியாகத் திரைகளையேபயன்படுத்தியிருக்க வேண்டியதில்லை. இன்னும் சில சில்லறைக் குறைகளும் இருக் கின்றன. ஆனால் எல்லாக் குறை களையும் படத்தின் நல்ல அம் சங்கள் சரிக்கட்டிவிடுகின்றன. "மனிதன்" ஒரு நல்லபடம்.

48ம் பக்கத்திலுள்ள உங்கள் பதில் என்ன? என்பதற்குரிய விடை:—

(1) மருமகன் ஆனல்

(2) பக்கத்தில் அதைவிட நீண்டகோடு போடவும்

(3) $\frac{1}{7}$ 1

(4) செவிடர்

(5) ஊமை

காதற் பரிசு!

ராஜு என்ற 18 வயது இளை ஞன் மதுரை பசுமலையைச்சேர்ந்த முத்துக்கருப்பன் என்பவருடைய மகன். பாப்பு என்ற 18 வயது இளம் பெண்ணும் அதே ஊரைச் சேர்ந்தவள். ராஜு 4-வது பாரம் படிக்கும் மாணவர். பாப்புவும் ராஜுவும் கடந்த 6மாத காலமாக ஒருவரையொருவர் காதலித்து வந்தனர். இருவரும் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினர். ஆனல் அவர்கள் திருமணத்திற்கு அவர்கள்பெற்றோர்கள் சம்மதிக்க வில்லை. ராஜு தேவர்குலத்தைச் சேர்ந்தவராகவும், பாப்பு சலவைத் தொழிலாளர் குலத்தைச் சேர்ந்த வளாகவும் இருந்ததுதான் அவர் கள் திருமணம் தடைபட்டதற்குக் காரணம்.

கல்யாணம் தடைப்பட்டுப்போன தின் காரணமாக மனமுடைந்த அவர்கள் இருவரும் சேலைத்தலைப் பால் இருவர் கைகளையும் சேர்த் துக் கட்டிக்கொண்டு திருப்பரங் குன்றத்திலுள்ள பட்டர்கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டனர். இவர்கள் பிரேதம் 8—5—53ல் கண்டுபிடிக்கப்பட் டது. "எங்கள் காதல் நிறை வேருததால் வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை செய்து கொள்ளுகிறேம்" என்ற கடிதத் தை போலீஸார் ராஜுவின் சட் டைப் பையிலிருந்து எடுத்தனர்.

ஞாபக சோதனைப் போட்டி 14

[கட்டணம் கிடையாது] முடிவு தேதி: 31—5—53

சரியான விடைக்கு
பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினால் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில்பிரசுரிக்கப்படும்.

1	— — த —
2	— கு — — கு —
3	ராஜ — — — — —
4	— — க்காரி
5	— க் — — — — ன்
6	— — — — அ — — — —
7	— — யா — தி
8	வா — — — — — — ம்
9	ப — சா — — — —
10	— ர — க — —

பெயர்..

விலாசம்:..

ஊர்.............................. ஜில்லா..

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால், இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களின் பெயர்கள் வரும்.

2 நேரில் கொண்டுவந்து கொடுப்பவர்கள் 50க்கு ஒரு அச்சுக் கூப்பனும், தபாலில் அனுப்புகிறவர்கள் 100க்கு ஒரு அச்சுக் கூப்பன் வீதமும் அனுப்பவேண்டும். போட்டிக் கூப்பன்களுடன் வேறு எதுவும் கண்டிப்பாய் வைக்கக்கூடாது.

3 எவருமே சரியானவிடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

4 31-5-53க்குப்பின் வரும் கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

ஞாபக சோதனைப் போட்டி 13 முடிவு

சரியான விடை

1	தந்தை	6	ஏழைபடும்பாடு
2	மாமியார்	7	மதனமோகினி
3	சாவித்திரி	8	சபாபதி
4	கிருஷ்ணன் தூது	9	ராஜமுக்தி
5	அசட்டுமாப்பிள்ளை	10	மகாபாரதம்

சரியான விடை அனுப்பிய கீழ்க்கண்ட ஒருவருக்கே பரிசுத் தொகை அளிக்கப்பட்டது.

பெ. தி. கோ. மாரியப்பன்,
7/42, சுலோசன நாடார் தெரு, விருதுநகர்.

விருதுநகர்
சென்ட்ரலில்

T. R. ராஜகுமாரி,
M. G. ராமச்சந்திரன்,
நாகையா, தங்கவேலு,
ஜாவர் சீதாராமன்,
T. S. துரைராஜ் நடித்த

பணக்காரி
(தமிழ்)

இப்பொழுது
நடைபெறுகிறது

விருதுநகர்
ஸ்ரீ ராதாவில்

G. வரலக்ஷ்மி,
நாகேஸ்வரராவ்,
M. N. நம்பியார்,
வஸந்தா,
K. R. செல்லம் நடித்த

பெற்ற தாய்
(தமிழ்)

விரைவில்
வருகிறது!

" ம கி ழ் ச் சி "

ஆண்டுச் சந்தா (தபாலில்)	ரூ.	3—0—0
தனி இதழ்	ரூ.	0—4—0

விளம்பர விகிதம் ஒரு தடவைக்கு

முன் அட்டை	3 கலர்	ரூ.	150
அட்டை பின்பக்கம்	2 கலர்	...	100
அட்டை உள் 2வது பக்கம்	2 கலர்	...	75
,, உள் 3வது பக்கம்	,,	...	50
உள் ஒரு பக்கம்	ஒரு கலர்	...	25
,, $\frac{1}{2}$,,	,,	...	15
,, $\frac{1}{4}$,,	,,	...	10

நீண்ட நாள் விளம்பரங்களுக்கும், மற்ற விபரங்களுக்கும் எழுதவும். விளம்பரம் சேகரித்து அனுப்புகிறவர்களுக்கு கமிஷன் உண்டு.

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

Regd. No. M. 5483. MAHILCHI May-Jun. '53.

காரம், குணம், மணம் நிறைந்தது
எங்கும் எப்பொழுதும் கிடைப்பது
பீடி சக்கரவர்த்தி
தா. பி. சொக்கலால் ராம்சேட் பீடி

புரோப்ரைட்டர்:
T. P. S. ஹரிராம் சேட்,
தா. பி. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழிற்சாலை,
முக்கூடல் P. O. (திருநெல்வேலி ஜில்லா.)

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் ஸ்ரீ. சதானந்தம்,
சதானந்தா அச்சகம்-மகிழ்ச்சி இல்லம்-விருதுநகர்.